

# The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY

**A. PANCHANATHAN**, M. A., B. Lib. Sc.,
*Administrative Officer i/c,*
T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXXV No. 1, 2 & 3

PUBLISHED ON BEHALF

The Sarasvati Mahal Library

Annual Subscription Rs. 6.00

A. D. 19[illegible]

# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# Sarasvati Mahal Library

EDITED BY

**A. PANCHANATHAN,** M. A., B. Lib. Sc.,
*Administrative Officer i/c,*
T. M. S. S. M. Library, Thanjavur.



Vol. XXXV No. 1, 2 & 3

**PUBLISHED ON BEHALF OF**

The Sarasvati Mahal Library, Thanjavur.

Annual Subscription Rs. 6-00

A. D. 1985

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXXV A. D. 1985 Saka 1906 No. 1, 2 & 3

# EDITORIAL

Dear Readers,

It immensely pleases me to present this thirty fifth volume of the Library Journal before the readers. The article 'Modi Palakani' is continued in this issue. Besides this, Pandita Ghanasyama's Shunmukha Leela in Marathi with a short note on in English finds place. The following articles in Sanskrit with their Tamil translations would delight the readers. "Serfoji-I and the books of his time", "Thirukkadavursthala Mahimai" "Thanjaiyil Bharata Natya Kalai" and 'Mannar Mohana Pallu'. these articles are based on old manuscripts. I hope it will help the readers to have a deep insight into the past and win their appreciation.

The Government of India have been kind enough to release funds for the publication of this Journal.

The Library Administration expresses its sincere feelings of gratitude to the contributors of the articles and also to the press for neat execution in printing.

T. R. RAMASWAMY, I.A.S.,
District Collector and Director,
T. M. S. S. M. Library.

Thanjavur,
28-1-1985.

# CONTENTS


PAGES

1. EDITORIAL

2. மோடிப்பலகணி—6 (*மரச்சாமான் முதலிய சாமான்கள்*) ... 1—14
— புலவர் திரு. வீ. சொக்கலிங்கம்

3. மன்னார் மோகனப் பள்ளு ... 1—12
— புலவர் திருமதி ச. திலகம், பி லிட்.,

4. முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும் ... 1—18

शरभोजिचरितम् (अनुबन्धः) ... 1—8
— வேதாந்த சிரோமணி & வித்துவான் திரு. என். ஸ்ரீநிவாசன்

5. திருக்கடவூர்த் தலமகிமை ... 1—5

तिरुक्कडयूरक्षेत्रमाहात्म्यम् ... 6—21
— சாஹித்ய சிரோமணி திருமதி எஸ். இராஜலக்ஷ்மி

6. ஷண்முகலீலா (*கனஸ்யாம பண்டிதர்*) ... 1—8

पंडितघनश्याम ... 1—14
— திரு. T. R. பீமராவ், மராத்தி பண்டிதர்

7. பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சையில் பரதநாட்டியக்கலை ... 1—26
— திரு. என். விசுவநாதன், தெலுங்கு பண்டிதர்

## மோடிப் பலகணி - 6.

# ✱⁑ மரச்சாமான்கள் முதலிய சாமான்கள் ⁑✱

புலவர் வீ. சொக்கலிங்கம்,
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சை மராத்திய மன்னர்களுடைய அரண்மனையில் இருந்த மரச் சாமான்களில் ஒரு சில, மோடி ஆவணங்களில் காணக்கிடைக்கின்றன.

### ஆவணம் எண். 44.

*1831*-ம் ஹு மே மீ *9*. மகாருசா சாயபு அவர்கள் சாமானை பட்டுரை ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கரிடமிருந்து ஸ்ரீ ஜான் பிளாக்கிபிரன் துரையவர்கள் பட்டுறை ராமசாமி ஒப்புக்கொண்டதுக்கு விபறம்.

மரச்சாமான்

| | |
|---|---|
| 73 | கறுப்பு நாக்காலி |
| 6 | மாக்கினி மேசை |
| 1 | றவுன் மேசை |
| 1 | பெரிய நாக்காலி |
| 1 | சஸ்ட்டு மேசை |
| 1 | சாதா மேசை |
| 1 | பொக்கு யிஸட்டான் |
| 1 | பெறிய றயிட்டிங் டஸ்க்கு |
| 1 | சின்ன றயிட்டிங் டஸ்க்கு |
| 9 | பேசனி ஸ்டான் |
| 2 | சோபா மேசை |
| 2 | காறட் டெபிள் |
| 1 | சதிரங்க மேசை |
| 1 | சதிரங்க மேசை |
| 2 | திரசிங் டெப்பில் (டேபிள்) |
| 1 | சோப்பா டெப்பில் |
| 4 | சேட்டு ஸ்டாண்(டு) |
| 6 | மோறு |
| 2 | கோட்டு யிஸ்டான் |
| 7 | டீப்பாசு |
| 2 | கேம் டேபில் |
| 3 | சில்லரை மேசை |
| 2 | சாதா மேசைப் பலகை |
| 2 | றவுண்(டு) மேசைப்பலகை |
| 12 | குளோப்பு |
| 17 | ஒத்தக்கிளை வால்சேட்டுக்கும்பி |
| 6 | ரெட்டைக்கிளைக் கம்பி |
| 2 | சின்னதோமத்திரா கட்டில் |
| 3 | பெரிய தோமத்திரா கட்டில் |
| 1 | கூசா ஸ்டாண்(டு) |
| 1 | கவுலத்தீனிடப்பு |
| 2 | கக்குசு நாக்காலி |
| 2 | பச்சை சகலாத்து |
| 9 | சாம்பற பாட்டு போட்டி |
| 1 | தண்ணிதொட்டி |
| 2 | கிருக்கி தொட்டி |
| 1 | திசுசேரிபாக்கு சுகப்போட்டு |
| 1 | கால்கவிற பிட்டீட்டு |
| 2 | காலியாயிருக்கிற சாம்பற்பாட்டு வுடவெத்து பெட்டி |

2 மசாலிச்சி விளக்குவைக்கிற யிஸ்ட்டான்
1 குதிரை அளக்கிற கிசம்
1 கட்டில் பந்தல்
1 கிளாக்கு
10 சேட்டு யிஸ்ட்டாண்டு
1 அழுக்கு உடுப்பு போடுற பிரப்பம் பெட்டி
1 லாந்தர் யேணி
2 சோபாக்கவுச்சு
1 பெறிய அலுமார்
1 சின்ன அலுமார்
5 வெட்டிவேர்த்தட்டி
4 பங்கா
2 மேட்டி அலுமார்
2 குசிணி மேசை
2 மாட்டு பொட்டி
1 தய்யல் மேசை
4 பிறம்புக்கவுச்சு

மெத்தை, தலகாணி தினுசு

5 கட்டில் மெத்தை
5 கவுச்சு மெத்தை
5 மெத்தை உறை
3 லங்கின் உறை
4 லங்கின தலகாணி உறை
22 தலகாணி
5 தோம்தீராக்கம்பிலிட்டு
4 பளைய தோமத்தீரா
11 கட்டில்த்துப்பட்டி
19 வெள்ளை தலகாணி உறை
5 திரசிங்குடப்பில் உறை
4 பந்தல் உறை
7 னூல் கட்டின வலை
1 கேம்பு கட்டில் காதிதோமத்திரா
2 சீட்டு தலகாணி உறை
1 கிழிஞ்சுபோன பளையதோம்த்தீரா
2 டீப்பாசு சகலாத்து உறை
2 நாக்காலி மெத்தை
13 கிடங்குத் துவாலை
2 துப்பட்டி 12 முளத்தில்
2 பயில் அறம்

பாத்திரங்கள்

1 கொள்ளவிக்கிற அண்டா
3 தேக்குசா
5 பளைய கெட்டில்
9 சாசு பாணை
6 யிஸ்மித்தி
4 கால்
2 கீறில்
5 தாலா
24 யிரும்பு புள்ளு
18 கேக்கு அச்சு
2 தமறத்தங்காயி அச்சு
1 அடிபோன தவா

இரும்புச் சாமான்கள்

1 யிரும்புரல் உலக்கை
1 ஆமர
1 வண்டில் மருசுத்து
1 யிரும்பு ரீப்பு
1 யிரும்பு போனடுப்பு
9 குளொப்புக் கம்பி
2 ரொட்டியிரும்பு
4 வெட்டுக்கத்தி
16 பொக்கு ஸ்டாண் கம்பி
26 லீம்மன் பாட்டில்
1 உடம்பு குளிக்கிற அடிபோன தொட்டி
5 கற்ப்பூரதயில பொட்டில்
26 சாவி
2 பூட்டு
15 சாறுய மலிக்கிறயிஸ்டான் பலகை
1 பீப்பாயியிஸ்டாண்டு
2 கேம்புகட்டுளு சொறுகுபலகை
1 சோப்பாள் பலகை
1 பிள்ளை கக்குசு நாக்காலி

கோணி சாமான்கள்

2 கோணிப்படுதா
1 ரெட்டு தலகாணி
2 தகாபயிடீசு

தோட்டத்து சாமான்கள்

7 மண்வெட்டி
2 வான்ஸ் கருவாள்

1 கத்திரிக்கோல்
2 கறுக்கறுவாள்
1 சூறிக்கத்தி
1 களக்கட்டு
1 பூட்டுசாவி
1 கோடாலி
1 புணல்
3 தண்ணிபூட்டை
1 மறதொட்டி
1 கூலிங் கடப்பு
4 தாம்புக்கயர்

வெத்துப் பொட்டில்

123 பெரிய வெத்துப்புட்டி
9 அரை புட்டி
31 கூம்பாச்சி புட்டி
6 சேசுபுட்டி
49 சில்லரைபுட்டி
617 கல்லு புட்டி

பீஞ்ஞான் சாமான்

43 சின்ன டீசு பெரிய டீசு
12 கரை டீசு பாட்டம் உள்பட
8 சதிரங்க டீசு
3 சாதா மூடியில்லாதது
12 சாசு கோபளப்பாட்டம் உள்பட
9 பயிடீசு
3 கிருக்கி டீசு பெரியது
4 சல்லாத்துப்போல
3 சூப்பு டூறியன்
1 மூடியில்லா சூப்பு டுறியன்
4 மீன் டீசு
43 சுடுதண்ணி பீஞ்ஞான்
132 தட்டபிஞ்ஞான்
72 சூப்பு பிஞ்ஞான்
136 அரைபிஞ்ஞான் கால் பிஞ்ஞான்
1 பளைய கோப்பை
12 முலாம்பூசின கோப்பை
12 சாசர்

முலாம்பூசின சாமான்ங்கள்

1 குறுட்டுவிஸ்ட்டானில் நல்ல புட்டி 5, உடைஞ்ச புட்டி 1 ஆக உருப்படி 6
4 பாட்டலி ஷ்டாண்டு
11 காண்டிலி ஷட்டிக்கு
1 உடைஞ்ச காண்டிலி ஷட்டிக்கு
2 லாந்தர்
8 கவறடீசு

கத்தி வகைகள்

71 மேசைக் கத்தி
36 முள்ளு
47 சின்னக்கத்தி
12 சின்னமுள்ளு
6 தலமேசைக் கத்தி
6 முள்ளு
1 அறம்
7 பளைய முள்ளு
2 தலமேசை முள்ளு
20 அறை முள்ளு

கிளாசு வகை

3 டிக்காண்டர்
1 சாதா டிக்காண்டர்
15 சல்லி கிளாசு
21 மண்டொகிளாசு
1 ஓட்டை கிளாசு
23 பிங்கறக் கிளாசு
12 கிரின் கிளாசு
12 பீற்வாட்டி கிளாசு
35 கிளாறட்டி கிளாசு
14 சம்பொயின கிளாசு
27 ஓயின் கிளாசு
2 சல்லி பிஞ்ஞான்
1 கிருக்கி சக்கரை கோப்பை
2 பட்டற பாட்டு கம்பிலிட்டு
16 சல்லிமூடி
24 வாலசேட்டு டம்ளர்

11 குளொப்பு கின்னம்
1 சீனுபீர் மக்கு
24 வாலசேட்டு
8 டெப்பில் சேட்டு
2 சுவிமீன் கண்ணுடி
83 யிரும்பு சுதிர்
10 குளொப்பு சங்கிலி
6 இய்ய கூசா
5 சயினுபேசன்
3 சக்கு
4 பிஞ்ஞான் கூசா
5 மூடியில்லாத பீசு பீசு பாட்டு
2 டேபில் சேட்டு வயிக்கிற தோல் பெட்டி
1 காப்பி கின்னனத்
1 காப்பி பாட்டு
1 கப்பல் அடுப்பு
6 கயிட்டு
2 சேட்டுமீன் கவர்
2 றவுண்டின விளக்கு
1 பித்தாளே பேசன்
1 காக்கடா
2 சின்னிக்கட்டி

1831-ம் ஷு மெயி மீ 9௳
ஜான்பிளாக்கி பறனதுறை பட்டுரை ருமசாமி (ஒப்பம்)

இவ்வாவணம், கையினுல் செய்யப்பட்ட காகிதத்தில் கடுக்காய் மையினுல் எழுதப்பட்டுள்ளது. இதில் அரண்மனையில் உள்ள பலவகையான சாமான்கள் வரிசைப் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் ஓரளவே யாதல்வேண்டும். இவைகளில் மன்னரின் உபயோகத்திற்குரிய பொருள்களும் இடம் பெற்றுள்ளன. சொற்கள் பிழைபட உள்ளன.

## ஆவணம் எண். 45

| நம்பர் | பழைய தளவாட விபரம் | | துகை |
|---|---|---|---|
| 1. | உத்திரம் யெனம் 2க்கு | 18 | |
| 2. | அட்டை யெனம் 2க்கு | 167 | |
| 3. | தேக்கு சரம் யெனம் 4க்கு | 33 | $348\frac{3}{4}$ அடியும் |
| 4. | நடுரூம் அசுமான கிரி போகியுள்பட சட்டம் | 30 | |
| 5. | பனங்கிவாசு யெனம் 3க்கு | 332 | |
| 6. | ரீப்பாய் பட்டை யெனம் 2க்கு | 861 | |
| 7. | தென்னஞ் சட்டம் யெனம் 1க்கு | 5 | |
| 8. | மூங்கில் துண்டு யெனம் 3-க்கு | 212 | |
| 9. | ஆணி யெனம் 2க்கு | 642 | |
| 10. | ஓடு யெனம் 2க்கு | 68000 | |
| 11. | கீத்து யெனம் 2க்கு | 3825 | |

| நம்பர் | பழைய தளவாட விபரம் | துகை |
|---|---|---|
| 12. | கம்பத்துக்கு நடுவில் வைக்கிற விருத்தக் கல்லு | 22 |
| 13. | ஷெ கம்பத்துக்கு உச்சியில் வைக்கிற தாறசாயி | 11 |
| 14. | உத்திரத்தில் பங்கா கட்டயிரும்பு பட்டம் | 2 |
| 15. | ஊஞ்சபலகை | 18 |
| 16. | ஷெ ஊஞ்ச தேய்த்த வளவு ஆணி | 15 |
| 17. | நிலைக்கு மேல் வளவு பலகை | 2 |
| 18. | தண்டியப்பலகை | 8 |
| 19. | தாம்பற குழாயி | 7 |
| 20. | அங்கணமய்யத்தில் குருவியர்கட்டை வளையமுள்பட | 20 |
| 21. | நிலை யெனம் 2 க்கு உருப்படி | 27 |
| 22. | லாந்தர் கம்பி | 3 |
| 23. | அசுமானகிரி படுதா சட்டம் பொதியுள்பட | 30 |
| 24. | சுண்ணும்பு புரை | 2 |
| 25. | கயிக்கட்டை | 4 |

நம்பர். புதுக்கோட்டை சமஸ்தானம், பிச்சத்தானம்பட்டி பங்களாவிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிற பழைய சாமான்களின் ஜாபித்தா.

இவ்வாவணம் மிக மெல்லிய கடிதத்தில் கடுக்காய் மையினுல் எழுதப் பட்டுள்ளது. ஆவணச் செய்திகளை நோக்குங்கால் இந்த பங்களா தஞ்சாவூர் அரண்மனைக்குச் சொந்தமானதாக இருக்கலாமோ என்ற ஐயம் உண்டாகிறது. இப்பெருங் கட்டிடம் இவ்வாறுன பொருள்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு கட்டிடம் என்பதனை நோக்குங்கால் தற்போதைய (Reinforce Concrete) பலப்படுத்தப்பட்ட கலவை கொண்டு கட்டப்பட்ட கட்டிடம் போல் அல்லாமல் பழைய முறையிலேயே வலிவுள்ள ஒரு கட்டிடமாகக் கட்டியிருந்தனர் என்பது தெரியவருகிறது. சில பொருள்கள் விளக்கமாக இல்லை.

(எனவே, அக்காலத்தில் வழக்கிலிருந்த பொருள்கள் என்னென்ன என்பதனை இதன் மூலம் ஓரளவு அறியமுடிகிறது. இதனுல் அவர்தம் வாழ்க்கை முறை எவ்வாறு அமைந்திருந்தது என்பதனையும் சிறிது தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது.) பழம் பொருள்களைக் காணும்போதும், கேட்கும்போதும், நம்முன்னுேர்களின் தொன்மைச் சிறப்பு காணப்படுகிறது. தொல்பொருள் துறையினரும் இவ்வாறுன பலபொருள்களைச் சேகரித்து, பண்டையோரின் வாழ்வியலை நமக்கு எடுத்துக்காட்டுகின்றனர். நமது சரசுவதிமகால் நூலகம் பண்டைச் சிறப்பினை வேறு முகத்தான் அறிவுறுத்துகின்றது.

இதற்கு மேலும் சில சுவையான செய்திகள் மோடி ஆவணங்களிலிருந்து கிடைக்கின்றன.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர், மகாலிங்க சுவாமிக்குச் செய்து வைத்த தேர் பற்றிய செய்தியாவது :-

மூட்டை எண் 106. கட்டு 48. 1862 அக்டோபர்மீ 18௳

கவர்ன்மெண்டுக்கு,

கி. பி. 1838 — 1840 - ல்

திருவிடைமருதூர் தேரை இராசா பிரதாபசிங்கஜி அவர்கள் தயார் செய்ததைப் பற்றி சிவாஜிராஜா அவர்கள் ஆக்ஷேபனை செய்தாற்போல், அந்த தேரின் வேலையைப்பற்றின கரஸ்பாண்டெண்ட்ஸும் ஏதாவது இருக்கிறதா என்று சொன்னபடி தேடினதில் இதுவரையிலும் அகப்படவில்லை. நாளை, நாளை யன்னிக்குள் தேடிப்பார்த்து அனுப்புகிறேன்.

சேவகன் லக்ஷ்மண், தஞ்சாவூர்.

திருவிடைமருதூரிலுள்ள இத்தேர் மிகவும் வேலைப்பாடமைந்ததாகவும், மகாலிங்கருடைய மூலத்தான உருவத்திற்குத் தக்கதாகப் பெரியதாக அமைந்திருக்கிறது. இத்தேர் அலங்காரம் பெற்று, மகாலிங்கேசர் அதில் எழுந்தருளி வரும் போது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தஞ்சை மராத்திய மன்னர்கள் வரிசையில் இரண்டாம் ஏகோஜியின் மகனை பிரதாப சிங்கர் கி. பி. 1741 முதல் 1764 வரை அரசாண்டவர். இவர் காலத்தில் இத்தேர் செய்திருக்கவேண்டும் என்னும் செய்திபற்றியதாகுமிக் கடிதம். அதே வரிசையில் கி. பி. 1833 முதல் 1855 வரை தஞ்சையை அரசாண்டவர், இரண்டாம் சரபோஜியின் மகனை சிவாஜி மன்னராவர். இவ்வாவணம் பிறந்த காலம் கி. பி. 1838 முதல் — 1840 வரையிலான காலம். எனவே திருவிடைமருதூர் தேர் மிகத்தொன்மையான தென அறிய முடிகிறது. ஆகையால் பாதுகாக்கப்படவேண்டிய தொல்பொருள்களின் பட்டியலில் இத்தேரும் காப்பாற்றப்பட வேண்டிய ஒன்ருகத் தெரிகின்றது.

மற்ெருரு சுவையான செய்தியாவது :- பெண்பிள்ளையை விலைக்கு வாங்கிக் கன்னிகா தானம் செய்து கொடுப்பது. இது பற்றிய செய்தியாவது :-

மகா-ா-ா-ஸ்ரீ திவான் சாயபு அவர்கள் கன்யாதானம் செய்ய பெண் பிள்ளையை விலைக்கு வாங்கியது : பெண் 1- க்கு ரூ15/- பிள்ளை 1- க்கு ரூ 20/-

சக ஆண்டு 1756, ஜய ஞூ (ஜேஷ்ட) ஆனி மீ சுத்த (வளர்பிறை) சப்தமி, வெள்ளிக் கிழமை (ஆனி மீ 1௳ 13—6—1834) கன்னிகா தானம், மாத்ருகா பூசைக்கு தங்கபணம் ரூ 55.

புண்யாவாசனம், சிவாபஸ்யந்து, அனுக்ஞை, பிராமணாள் நாந்தி, கணேசர் மதுபர்க்கம், கலசம், பிரதிமை, நவக்கிரகம், மண்டல பிரதிமை ஆகியவற்றிற்கு 188 காசுகள்.

பிராயச் சித்தாங்க கிருச்சிரம் 6-க்கு ரூ 21.
பிராமணபோஜனம் ஆசாமிகள் 3000 க்கு தட்சிணை ரூ $18\frac{1}{2}$
பெண்ணின் தாய் தகப்பனுருக்கு ரூ 2000/
கன்யாதான தட்சிணை ரூ 1000/
ஸ்வஸ்திபுண்யாகவாசனம், சம்பாவனைக்கு ரூ 2000/

கி. பி 1834 எனில், தஞ்சை மன்னர் சிவாஜி சத்திரபதியின் காலமாதல் வேண்டும். இப்படியான செய்தியினை ஒரு ஆவணத்திலிருந்து காணமுடிகிறது. தனக்குப் பெண் இல்லாவிட்டாலும், ஒரு பெண்ணை விலைக்கு வாங்கியாவது கன்னிகா தானம் செய்து கொடுப்பது நல்லது என்ற கொள்கை அக்காலத்தில் இருந்துளது. இதற்கு அனுசரணையாக மற்றொரு செய்தி :-
மூட்டை. 229— அரபி. 1229.

ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ மகாராஜா சத்திரபதி சாயேப் அவர்கள், ஓர் பெண்ணை, தனது பெண் என்று, 2-வது கன்யாதானம் செய்வது என்று சொன்னார்கள். அந்த வைபவம் அனுபவிக்கமுடியவில்லை.

இவ்வாவணத்தாலும் இச்செய்தி புலனாகிறது. இது இக்காலத்தில் வேறு விதமாக, அரசாங்கம், அறக்கட்டளைகள், கோயில் தேவத்தானங்கள், தனியார், முதலானவைகள் ஏழைகட்குத் திருமணங்கள் செய்துவைக்கின்றன.

வேறொரு சுவையான செய்தியாவது :- ஜல சூத்திரத்தினால் செய்யக் கூடிய வேலைகள். 118—47—1—1849.

1. ஒரு பெட்டி செய்து அதற்குத் தீ வைத்தவுடன் (கொளுத்தியதும்) அதிலிருந்து, அநேக மாதிரியான பொம்மைகள், உடம்பு முழுதும் நெருப்புமயமுள்ளவைகளாகக் கிளம்பி கொஞ்சதூரம் செல்வது.

2. 2 சோல்ஜர்கள் செய்து, வாசற்படியில் நிறுத்திவைத்து, வருகிற ஜனங்களை, ஜீவனுள்ள வாயிற்காப்பான் போல நேரில் வந்து, உள்ளே போகாதபடி தடுப்பது.

3. ஒரு பெட்டியை ஒருவர் திறந்தால் திடீரென்று, வெகுவேகமாய், புலி, சிப்பாய்கள் வந்து மனிதனை பயமுறுத்துவது.

4. சில பொம்மைகளைச் செய்து அவைகளை அந்தரத்தில் நிறுத்தி வைப்பது.

5. ஐந்து (உ)லோகங்களைத் தண்ணீராகச் செய்து காகிதத்தின் மேல் எழுதுவது.

6. 12 முழம் உயரம் மொறைப்பா ? செய்து விடுவேன்.

7. அநேக விதமான சின்ன பட்சிகளைச் செய்வேன்.

8. இப்பொழுது அரண்மனையில் கொடுத்திருக்கும் மாதிரியாக சீசாவில் அநேக வேலைத்தனம் செய்வேன்.

9. பட்சி சாதிகளைச் செய்து தண்ணீரில் போட்டால், அவைகள் எப்பொழுதும் அதனிஷ்டப்படிச் சுற்றிக் கொண்டிருக்கும்.

10. பொம்மைகளை நடக்கும்படி செய்வேன்.

11. மெழுகு, மரங்கள், பூக்கள் வகையறு, அநேகம் செய்வேன்.

12. சின்ன கண்ணாடிக்குப் பாதரசம் போடுவேன் ?.

13. அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், பிரம்மகாருடம் எனப்பட்ட வேலைகளைச் செய்வேன்.

14. இன்னும் அநேகம் சில்லரை வேலைகளைச் செய்வேன்.

இவ்வாறாக ஆவணத்தில் கண்டுள்ளது. ஜலசூத்திரத்தினால் செய்யும் வேலைகளேயன்றித் தன் சுயமுயற்சியாலும் செய்யும் வேலைகளையும் தெரிவித்துள்ளார். மற்றொரு ஆவணத்தில் (184— 21— 4—1214) "யுத்த சாலையில் சொல்லி கிருஷ்ண விலாசத்திலுள்ள ஜலசூத்திரத்தின் பெரிய பெட்டியை (கெட்டுப் போனதை) செப்பனிடுகிறது" என்றுளது.

ஜலசூத்திரத்தின் தொடர்பான ஆவணங்களில் ஒன்றிரண்டு இங்கு காண்போம்.

119—47—17—1849 ஏப்ரல் 3உ

மகாஸ்வாமி சிவாஜி மகாராஜா அவர்கள் சமூகத்திற்கு ஜலசூத்திர வேலைக்காரனான முத்துசாமி பிள்ளை நமஸ்காரத்துடன் எழுதிக்கொண்ட மனு.

சேவகன் அநேக ராச்சியங்களைச் சுற்றி ஜலசூத்திர வேலைகளைக் கற்றுக் கொண்டு, மகாராசாவைப் பார்க்கவேணுமென்று இங்கு வந்து 1½ வருஷமாயிற்று. இச்சங்கதி ராமராவுக்கும், ஹீரோஜி போஸலேவுக்கும், பெரிய மனிதர்களுக்கும் தெரியும். இப்பவும் சென்ற மாதம் பங்கில்[1] என்னை அழைப்பித்து, "நீ கொண்டுவந்த ஜலசூத்திர வேலைகளை எவ்விதமாகக் காட்டுவதென்றிருக்கிறாய் ?" என்று கேட்டார்கள்.

---

1 வளாகம்.

மகாராஜா பார்த்து இன்ன துகையைக் கொடுப்பதாக நிச்சயஞ் சொன்னால், அதைக் காட்டுகிறேனென்று சொன்னேன். ஆனால் மறுபடியும் என்னைக் கேட்டார்கள். இந்தப்படி நாலுவிதமாகவும் தர்க்கமான பின்னர், என்னுடைய ஜல சூத்திரம் சுமார் ரூ. 100க்குள் பொருமானமுள்ள சாமான்களினால் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு ஆசாமிகளிருந்து சுற்றினால்தான் நீர் நிலைகளின் தண்ணீர் மட்டத்திலிருந்து பூமி மட்டத்திற்குத் தண்ணீர் வரும். இதற்காக எனக்கு 1000 வராகன் கொடுத்தால் காட்டுகிறேன். அந்தப்படிக்கு காட்டுகையில் தண்ணீர் வராமல் போனால் எனக்கு ஷெடி துகையைக் கொடுக்க வேண்டியதில்லை என்று நான் சொன்னதற்கு, இப்பொழுது ஒரு கிணற்றில் போட்டுக் காட்டலாமா என்று பங்கில் என்னைக் கேட்டதற்கு, அப்படி நான் காட்டமாட்டேன் என்று சொன்னேன்.

பின்பு, நான் சொன்னதைக் கேட்டு, சரி என்று ஒப்புக்கொண்டு 1000 வராகனுக்கு என்னிடம் கரூர் நாமா எழுதி வாங்கிக்கொண்டு, மகாராஜா சாயேப் அவர்களுக்குத் தெரிவித்துச் சொல்லுகிறேன் என்று கிருஷ்ணசாமி அப்பா சொன்னார்.

3 நாட்களுக்குப் பின்பு என்னை அழைப்பித்து அனுப்பி நீ கொண்டு வந்திருக்கும் சூத்திரத்தை ஸர்ஜாவுக்குச் சமீபமுள்ள கிணற்றில் இன்று மத்தியானம் 3மணிக்குள் போட்டுத் தயார் செய்யும்படி மகராஜா சாயேப் அவர்கள் உத்திரவாயிருக்கிறது என்று பங்கில் சொன்னார்கள். அப்படியே தயார் செய்து போடுகிறேனென்று சொன்னேன். அதற்கு எனக்கு என்ன உத்தரவு என்றேன்.

நீ எழுதிவைத்தபடி மகாராஜா சாயேப் அவர்களின் உத்தரவாயிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் மகாராஜா சாயேப் அவர்களின் உத்தரவுக்கு வேறொன்றுமில்லையென்று எண்ணி, உத்திரவின்படி, மேற்சொன்ன கிணற்றில் யந்திரத்தைத் தயார் செய்து அமைத்தேன். மகாராஜா சாயேப் பவர்கள் வந்து, தண்ணீர் வருகிறதைப் பார்த்து, " நீ சொன்னபடி செய்தது சரிதான். ஆனால் இத் தண்ணீர் இதைக் காட்டிலும் உயரமாக ஏறும்படியாகத் தெரிகிறது. அதன்படி தயார் செய்து வைக்கவேணுமென்று உத்தரவிட்டார்.

அந்தப்படிக்கு 3 நாள் வரையில் மகாராஜா சாயேப்பின் உத்திரவின்படி நடந்தேன். அத்தினம் 5, 6 வராகன் ரொக்கம் பெறும்படியான ஒரு கழுத்தாபரணமும், ரூ 10 பெறும்படியான ஒரு ஆடையையும் எனக்கு இனாம் கொடுத்தார்கள்.

நாலாம் நாள் காலையில், மகாராஜா சாயேப் அவர்களின் உத்தரவின்படி பங்கின் கிருஷ்ணப்பா என்னை அழைத்துவந்து, ஷெடி இயந்திரத்தை எடுத்து

தாஸ்தான் மகாலின் கிணற்றில் போடும்படியாக மகாராஜா சாயேப்பின் உத்திரவாயிருக்கிறது, என்று சொன்னார். அதன்படி எடுத்துப் போட்டு விட்டேன்.

பிறகு அந்த இடத்திற்குப் போவதற்கில்லாததால் போகவில்லை. பின்பு அரண்மனையின் வேலைக்காரனை வைத்துக் கொண்டு, அதே மாதிரி 2, 3 இயந்திரங்களைத் தயார் செய்து, இராஜகோபால சுவாமி கோயிலில் ஒன்றும் சிவகங்கையில் ஒன்றும் போட்டேன்.

பின்பு, என்னிடம் பேசினபடி துகையை நான் கேட்டதற்குச் சரியான பதிலைக் கொடுக்கவில்லை. ஆகையால் மார்ச்சுமீ 17வ பங்கில் ஒரு யாதி[1]யைக் கொடுத்தேன். அதற்கும் உத்தரவாகவில்லை. என்னிடம் எழுதிவாங்கின தஸ்தாவேஜையும், மேஷி சூத்திரம் போட்ட தினம், நான் எழுதிக்கொடுத்த ஒரு யாதியையும், பங்கில் கொடுத்த யாதி ஒன்றும், இம்மூன்றுவது யாதியும் வரவழைத்து அதை மகாராஜா சாஹேப் பார்த்து மனதில் வாங்கி சேவகனுடைய கஷ்டத்திலிருந்து விலக்கவேணுமென்று மார்ச்சு மீ 20வ தபால் மூலம் ஒரு யாதியையும் அனுப்பித்தேன். அதற்கும் இதுவரையிலும் உத்தரவு தெரியவில்லை, அத்துடன் அந் நான்கு யாதிகளையும் மகாராஜா சாயேப் அவர்கள் வரவழைத்துப் பார்த்து, ஏழையான என் பேரில் தயவு செய்து, என்னுடைய கஷ்டத்தை விலக்க வேண்டுமென்று பிராத்திக்கிறேன்.

இந்த மகாராஜா சாயேப் பங்கில், இந்த ஒரு ஜல சூத்திரத்திற்கு மாத்திரம் 1000 வராகன் கொடுப்பதாகச் சம்மதித்து எழுதி வாங்கியிருக்கிறார்கள். இதைத் தவிர 100 வராகன் பெறும்படியான ஒரு சீசாவையும் அரண்மனையில் கொடுத்திருக்கிறேன்.

இப்படியிருக்க, எனக்கு இனுமென்று கொடுத்ததைத் தவிர வேறொன்றும் கிடைக்காது போகலாம், என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதனால் என் மனதுக்கு மிக்க வியசனமுண்டாயிருக்கிறது. என்னிடம் எழுதி வாங்கினபடி, தண்ணீர் ஏறாமலிருந்து எனக்கு ஏதாவது அவமானம் ஏற்பட்டிருந்தால், இதற்கு முன் இம்மாதிரியான வேலையை ஆரம்பித்த ஒரு துரையின் கதியை நானும் அடைந்திருக்க வேண்டும்.

என்னுடைய வேலைகளை மாத்திரம் வாங்கிக்கொண்டு என்னிடம் கொடுப்பதாகச் சொன்ன துகையை கொடுக்காமல் மறுபடியும், மகாராஜா சாயேப்பை நான் பார்க்க முடியாமல் செய்து, நடுவிலுள்ளவர்கள் மோசஞ்

---

1 மனு.

செய்துகொண்டு வருகிறார்களானகையால் சாஹேப் மனமுவந்து, பங்கில் கொடுப்பதாகச் சொன்ன துகையை எனக்குக் கொடுக்க உத்திரவு செய்ய வேணும்.

முகாம் - தஞ்சாவூர் இந்தப்படிக்கு

1849 - ஏப். 3வ. (ஒப்) . முத்துசாமி பிள்ளை

இவ்வாறு ஒரு ஜலசூத்திர அமைப்பின் பின்னணியில் இவ்வளவு செய்திகளைக் காணமுடிந்தது. இதன் தொடர்பாக மற்றொரு நீண்ட ஆவணம் தனது வரலாற்றை ஜலசூத்திரத்தின் தொடர்பு கொண்டு கூறுகின்றது.

105-C — 253 — 1850 — ஜனவரிமீ 4வ

தஞ்சாவூர் மகாராஜா சாயேப் அவர்களுக்கு புதுச்சேரியிலிருக்கும் லாமோரி என்பவர், ஜலசூத்திரத்தின் வேலை செய்கிறவர், கொடுத்த மறு, யென்னவென்றால்:

அரண்மனையாரவர்களிடத்தில் ஜலசூத்திர வேலை செய்ய வேண்டியதற்காக சென்றிலியர் துரை நாகப்பட்டணத்திலிருந்து தஞ்சாவூருக்கு வருகிறபோது ஷியார் எழுத்து வேலையிலிருந்தவரானதால், ஜலசூத்திர வேலை முதலான யாதொரு வேலையும் தெரியாததனாலேயும், நான் மேற்படி வேலைகளில் கும்பினியார் பட்டரையான பரங்கிப்பேட்டை, கூடலூரர், புதுச்சேரி, தட்டான் சாவடி முதலான இடங்களில், நானிருந்து ஜலசூத்திர வேலை, ஆலை வேலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், சகல வாத்தியங்களையும் பழுது பார்த்து சுத்தப்படுத்தல், இரும்பு, பித்தளை, மரம் தண்டவாளம் இதுகளை அந்தந்த வேலைகளுக்குத் தகுந்தபடி, சீர்மை வேலைப்படி கடசல் பிடித்து, வேலை செய்ததற்காக அந்தந்த பட்டரைகளிலிருந்து சான்றிதழ்களும் பெற்று வந்திருக்கிற யென்னுடைய வீடாகிய புதுச்சேரிக்கு ஷி சென்றிலியர் துறைசாணி வந்து, தன் புருஷன் ஷி ஜலசூத்திர வேலையை அரண்மனையில் ஒப்புக்கொண்டிருப்பதாயும், அந்த வேலை தன் புருஷனுக்குத் தெரியாததினாலே, என்னை வந்து அந்த வேலையை முடித்துக் கொடுக்கவேணுமென்றும் சொன்னதை நான் நம்பி இந்தத் தஞ்சாவூருக்கு வந்து, ஷி வேலையைத் துவங்கின மாதத்தில் ரூ. 60 சம்பளம் குடுப்பதாயும், 5 மாசத்தில் ரூ. 100 வீதம் அரண்மனையில் சம்பளம் செய்து குடுத்து ஷி ஆலையை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதற்கு ஒருவர் வேண்டியதானதினாலே, என்னையே இந்தத் தஞ்சாவூரில் ஸ்தாபித்து போடுகிறதாயும் ரொம்பவும் உறுதியாய்ச் சொன்னதை நான் நம்பி, சமுசார சகிதமாய், எனக்கிருந்த பட்டரையைக் கலைத்துப்போட்டு யிவ்விடத்துக்கு வந்ததில் ஷி ஜலசூத்திர வேலை செய்ய யெத்தனப்பட்ட முன்னுக்கு யென்னைக் கொண்டுபோய் அதில் நேமித்து, ஷி வேலையைப் பத்தி தான் வந்தாலும் தவறாமலிருந்தபோதிலும் நடப்பிக்கிறதென்றும், ஷி வேலை பார்த்து வருகிற காரியஸ்தர்களுக்கும், சர்க்கீல் பண்டிதரவர்களுக்கும் தெரியப்

படுத்தியும், நான் ஷி வேலையை ஜல்தியாய் முடிக்க யத்தினப்பட்டு வந்ததில் ஷி துரை வந்து, ஷி வேலையை ஜல்தியாய் முடித்தால், தனக்கு வரப்பட்ட வருமானம் நிருத்தலாப்போகுமென்றும், நம்மைத் தவிர அரண்மனையில் வேரே கெட்டிக்காரர்களில்லையென்றும், ஷி வேலையை ஜல்தியாய் முடிக்கக் கூடாதென்றும் சொன்னதும் தவிர, நீ இப்படி ஜரூராக வேலே முடித்தால் உன்னே எடுத்துப் போடுவேனென்றும், ரொம்பவும் கண்டித்துச் சொன்னதை நான் யெவளவும் கேளாமல் ஜரூரில் ஷி வேலையை செய்து கொடுத்தால், அரண்மனையாரவர்கள் சந்தோஷப்பட்டு இனும் முதலானது செய்துவைப்பார்க ளென்கிற எண்ணத்தினுல், ஷி வேலையை ஜல்தியாய் செய்து வந்தேன்.

மறுபடியும் என்னைக் கோபித்துக் கொண்டு, 'இந்த வேலேக்கு இனி நான் வரவேண்டியதில்லே' யென்றும், தான் பார்த்துக் கொள்ளுகிறதாயும், தன் வீட்டிலிருந்து பெட்டி வண்டி 2 செய்யச் சொன்னுர்.

அந்தப்படி என் சொந்த சாமான்களைப் போட்டு வேலே செய்து தீர்மானமானதின் பிறகு யெனக்குப் பேசினபடி ரூ 60 குடாமல் ரூ. 25 குடுத்தார். பேசினபடி ரூ. 60 ஏன் குடுக்கிறதில்லே யென்று கேட்டதற்கு செலவாயிருக்கிற காலத்தில் பாக்கிப் பணத்தைக் குடுக்கிறதாகச் சொன்னதை நான் நம்பியிருந்தேன்.

அப்படியிருக்கையில். ஷி தொரை வீட்டுக் கெணத்தில் நான் பூட்டின தண்ணிச் சாம்புகிற பம்புவை அரண்மனையார் விலேக்கிக் கேழ்ப்பதாக எண்ணி அதின் விலே ரூ. 300 என்றும், மறுபடியும் ரூ. 700 என்றும், பிறகு 700 விராகனென்றும் சொன்னது எனக்குத் தெரிந்து, அரண்மனே மேஸ்திரி முத்துக் கொத்தனிடத்தில் ஷி 700 விராகனுக்கு, அதைப்போல் 5, 6 செய்து தருகிறேனென்றும், ஒண்ணுக்கு அவ்வளவு விலே வீணுய்க் குடுக்க வேண்டியதில்லே யென்று சொன்னதும், அதின் பிளானைப் போட்டுக் காண்பித்ததும், எவ்விதமாகவோ தெரிந்து, 'நீ யெனக்குத் தேவையில்லே' யென்றும், 'ஓனக்குப் பாக்கிச் சம்பளம் கிடையா'தென்றும், 'ஓனக்கு அஞ்சாறு பாஷை தெரியுமானதால், அதற்காக அழைத்து வந்தேனேயல்லாமல், ஷி வேலையை ஜல்தியாய் முடிக்க அழைக்கவில்லேயென்றும், 'நீ திங்கட்கிழமை தினம் போனுல் படி குடுப்ப'தாயும், 'யில்லாவிட்டால் குடுக்கிறதில்லே' யென்றும் சொல்லுகிருர்.

ஷி ஜலசூத்திர வேலேயை முடிக்க யின்னும் ரெண்டு வருஷம் செல்லுமென்கிறதாயிழுத்துவிட்டு, அரண்மனையார் பணத்தை ரொம்பவும் வாங்கிக் கொள்ள யத்தினம் பண்ணுகிருர்.

அதனுல் ஷி ஜல சூத்திர வேலே ஆறு, ஏழு மாசத்திற்குள் நான் முடித்துக் குடுக்கிறதும் தவிர, அரண்மனையாரவர்கள் மனதுப்படி யென்னென்ன வேலேகள் யெந்தெந்த தருணங்களில் வேண்டியதிருக்குமோ அந்தந்த வேலேகளை அந்தந்த சமயங்களுக்கு செய்துகுடுக்க சித்தமாயிருக்கிறேன்,

ஆகையால் ரா. அரண்மனையாரவர்கள் தயவு செய்து ஷியாரிடத்தில் என் பாக்கிச் சம்பளத்தைக் கணக்குப்படி வாங்கிக் குடுப்பதும் தவிர ஷியார் சம்பளத்தில் ரூ. 60/- பிடித்துக் கொடுத்து என்னை அரண்மனை மனுஷனாய் அரண்மனை வெருதிப்படி நியமித்து, என்னை மேல்கண்ட வேலைகளை வாங்கிப் பார்த்தால் ஷி ஜென்றிலி துரைக்கு குடுக்கிற அதியத்துகையான சம்பளம் வீணென்றும் சித்தத்துக்குத் தோணும்.

ஆனதால், அரண்மனையார் எனக்கு, மேல்கண்டபடி சம்பளம் குடுத்து என்னிடத்தில் வேலைவாங்கி வரவேணுமென்று மிகவும் வணக்கத்துடனே சலாமுஞ் செய்து கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேணும் சலாம்,

(Sd). P. G. Limary.

முன்னதில் தமிழ்நாட்டு முத்து சாமி பிள்ளையும், இதில் வெளிநாட்டு லா மோரியும் தமது கைவரிசைகளைக் காட்டியிருக்கிறார்கள்.

இதிலிருந்து, தஞ்சை மராத்திய மன்னர் சிவாஜி சத்திரபதியின் காலத்தில் இவ்வாறான ஜலசூத்திரத்தினைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதும் அது தொடர்பான பல விதமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன என்பதும் தெரிய வருகின்றன.

தஞ்சை, மராத்திய மன்னர்களுடைய நீதிமுறைகளில் ஒருசில இங்கு காண்போம்.

*152—17—3—1822.* கும்பினியிலிருந்து இரண்டுபேர்களைச் சாவடியில் கொண்டுவந்துவிட்டார்கள். அவர்களுக்கு சர்க்காரின் உத்தரவுப்படி ஆசாமி 1-க்கு ஒவ்வொரு வீதிக்கு வந்ததும், பெரம்பினால் முழங்காலுக்கு அடியில் ஆறு அடிகளை அடித்து, நாலு வீதிகளிலும் தண்டோரா போட்டு இரண்டு பேர்களையும் வெளியில் விட்டுவிட்டார்கள் மேற்சொன்னவர்கள் லயனில் திருடினார்களாம். அத் திருட்டுப்போன சொத்து, சொத்துக்காரனுக்குக் கொடுக்கப்பட்டது.

***157—31—4—1776.*** கீழா நெல்லியிலிருந்த பெண்கள், தங்களுடைய சனங்கள், நடங்குடியின் காட்டில் வழியில் சிற்சில யிடங்களில் ஆட்களிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண்ணும், மூன்று ஆண்களுமிருந்தார்கள். அவர்களைக் கொல்ல வேணுமென்று திருடர்கள் வந்தார்கள். அவர்களில் ஒரு திருடனுடைய தலையை வெட்டிக்கொண்டு வந்ததற்காக இனாம் துப்பட்டி 1-க்கு $8\frac{1}{2}$ பணம்.

161—1—1—1826. முத்துவிரு என்னும் கம்மாளன் கூலிக்காரன்; வெள்ளி வேலை செய்ததில், வெள்ளியை உருக்கும்பொழுது, கரியையும் செம்பையும் சேர்த்து, அந்தக்கரியை, உருக்க வைத்திருக்கும் வெள்ளியில் போடும் சமயத்தில், ஒரு இடத்தில் நடக்கும் சமாசாரத்தைப் பார்த்து வேறிடத்தில் சொல்லுகிற காவளா என்பவன் பார்த்ததில் ஒரு விராகனிடை செம்பிருந்ததால், அந்தக் குற்றத்திற்காக ஷியாரிடமிருந்து அபராதம் 6 பணம் வாங்கப்பட்டது.

161 — 1 — 8 — 1826, எத்திக்கட்டியின் கீழே 16 கம்பத்தின் தூண் ராட்டினத்திற்கு வேலைக்கு வராமலிருந்த தேவதாசிகளுக்கு சுமார் 78 தேங்காய்கள் அபராதம்.

162 — 2 — 13 — 1820. கொத்தவால் விஷயம் :-

களிமேட்டின் வீராயி என்பவள், வடக்கலங்கத்தில் வெங்கடாசலத்தினுடைய வீட்டில் சொப்பு ஒன்றைத் திருடினாள். அவளைச் சாவடியில் வைத்திருக்கிறது. அவளை நான்கு வீதிகளிலும், தண்டோராவுடன் சுற்றி, அச்சொம்பை அவள் கழுத்தில் கட்டி, ஒவ்வொரு வீதிக்கும் பிரம்பால் 3 அடி அடித்து, 3 வாசல்களையும் காட்டி, கோட்டைக்கு வெளியே அனுப்பவும், சொந்தக்காரனுக்கு சொம்பைக் கொடுப்பதற்கும் உத்தரவானது.

(மற்றொரு ஆவணத்தில், 'இத்தண்டனை நிறைவேற்றப் பட்டு, சொந்தக்காரரிடம் சொம்பு ஒப்படைக்கப்பட்டது, என்று காணப்படுகிறது).

165 — 29 — 1 — 1829. மாதே கட்டுபாவாவுக்குப் பதிலாக சொக்கலிங்கம் எனபவன், கோபுரத்தின் மேல் 3-வது அங்கணத்தில், ஆயுதங்கள் வகையறுவின் வேலையைச் செய்யாமல் பேசிக் கொண்டிருந்தானல்லாமல், 2,3. இடங்களில் ஒன்றுக்குப் போயும், வெற்றிலை போட்டுக் கொண்டு எச்சில் துப்பினதையும் பார்த்தும் ஜாக்கிரதை செய்யாமல் இருந்த குற்றத்திற்காக அபராதம் 12 துட்டு.

இவ்வாறு, சிறு குற்றத்திற்குக்கூட பெரும் தண்டனை விதித்ததிலிருந்து, அவர்கள் காலத்தில், அதனைப்பார்த்த மற்றவர்கள், திருடாமலும், தவறு செய்யாமலும் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகின்றது.

இது போன்ற இன்னும் சுவையான பல செய்திகள் மோடி ஆவணங்களிலிருந்து வெளிவரக் காத்திருக்கின்றன.

# மன்னர் மோகனப் பள்ளு

திருமதி. புலவர் **ச. திலகம்,**
தமிழ்த்துறை,
சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.

## முகவுரை

சேர, சோழ, பாண்டியர்களுடைய ஆட்சி மறைந்ததினுல் தமிழ் உலகம் இருளில் இயங்கிக்கொண்டு நெடுங்காலம் தத்தளித்தது. தமிழ்ப் புலவர்களைப் புரக்குந் தலைவர்களும் அரசரும் அரியராயினர். பெருங்காவியம் தோன்றும் நிலைமையும் ஏற்படவில்லை. எனவே பழைய இலக்கிய மரபுகள் மாறிச் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. தமிழ்மொழியின் ஏற்றத்திற்கும், எழிலுக்கும் எடுத்துக் காட்டாய் சிற்றிலக்கியச் செல்வத்துள் பள்ளு இலக்கியமும் ஒன்ருகும்.

பள்ளு இலக்கியத்தின் மூலம் உழவர்களின் பழக்க வழக்கங்கள், ஒழுகலாறுகள், அவர்களிடையே வழங்கும் சமுதாயக் கோட்பாடுகள், அவர்கள் தொழில்முறை முதலாய பல்வேறு செய்திகளைப்பற்றி அறிகின்ருேம். மேலும் இப்பள்ளு நூல்கள் முத்தமிழ் நூல்களாக விளங்குவது மட்டுமின்றிப் பண்டைத் தமிழ் அரசர்கள், வேளிர்கள், குறுநில மன்னர்கள், மன்னரின் பின்னேர்கள், வள்ளல்கள் முதலியவர்களின் வரலாற்று நுட்பங்களும் விளங்கச் செய்கின்ற கருவூலங்களாகவுந் திகழ்கின்றன. இப்பள்ளு நூல்கள் பொருட் சிறப்பால் பொலிவும், வளர்ச்சியும் பெற்று இன்று 44 என்ற எண் அளவை எட்டி உள்ளன. மேலும்,

"நெல்லு வகையை எண்ணினுலும்
பள்ளுவகையை எண்ண முடியாது" என்ற

பழமொழி பள்ளுகளின் வகைகள் அதிகம் என்பதை அறிவிக்கின்றது.

தொல்காப்பியம் குறிப்பிடும் சேரி மொழி இலக்கியம் பற்றிய செய்தியைக் கருவாகக் கொண்டும், சிலம்பில் நாம் காணும் விருந்திற்பணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு முதலிய உழவுப் பாடல்களையும், ஆடும் பள்ளி, அழகுடைய பள்ளி முதலிய வரிக் கூத்துக்களையும் தழுவி கோயிலொழுகில் காணும் பள்ளுப் பாட்டு போன்றவற்றோடும் பன்னிரு பாட்டியல் கூறும் உழத்திப்பாட்டின் பொருளமைதியோடும் இணைந்து கதைப் போக்குடன் எழுந்த ஒருவகை இலக்கிய அமைப்பே பள்ளுச் சிற்றிலக்கியமாகும். பள்ளு இலக்கியத்தைப் பள்ளு என்றும், பள்ளிசை என்றும், பள்ளேசல் என்றும் பள் மூவகை என்றும் அழைத்தனர்.

பள்ளின் விளக்கத்திற்காகப் பலர் இலக்கணம் எழுதி உள்ளனர். முதன் முதலாக கி. பி. 14-ஆம் நூற்றாண்டில்தான் இலக்கணம் எழுதப்பட்டது. வீரமாமுனிவர் தமது சதுரகராதியில் (கி. பி. 18-ஆம் நூற்றாண்டு). உழத்திப் பாட்டுக்கு விளக்கம் தந்தாலும் பள்ளின் இலக்கணத்தோடு பொருந்தி வருகின்றது. எனவே பிற்காலத்தில் உழத்திப்பாட்டுக்கும், பள்ளு பாட்டிற்கும் உள்ள இடைவெளி குறைந்து இரண்டும் ஒன்றாகிவிட்டதை அறிந்து கொள்ளலாம்.

பள்ளு நூல்கள் பிற சிற்றிலக்கியங்கள் போன்றே குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டுத் தத்தம் பெயர்களைப் பெற்று விளங்குகின்றன. பெரும்பாலான பள்ளு நூல்கள் பாட்டுடைத் தலைவனோடு தொடர்புடைய ஊர்ப்பெயரோடு இணைந்துள்ளன. இதற்கு வடகரைப் பள்ளு, சேற்றூர்ப் பள்ளு உதாரணமாகும். வேறு சில நூல்கள் பாடப்பெற்ற தலைவன் அல்லது தலைவியின் பெயராலும் வழங்குகின்றன. செண்பகராமன் பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு ஆகியன இம்மரபில் பெயர் பெற்றமையாகும்.

இப்பள்ளு நூல்கள் வரிசையில் வைத்தியப்பள்ளு, திருநீலகண்டன் பள்ளு, மன்னார் மோகனப்பள்ளு முதலிய நூல்களும் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இப்பகுதியில் வெளி வந்துள்ளது மன்னார் மோகனப் பள்ளு என்ற நூலாகும்,

இந்நூல் எமது நூலகத்தின் தமிழ்ப் பகுதியின் ஓலைச் சுவடிகளில் சுவடி எண் 19-B என்ற எண்ணைக் கொண்டதாக உள்ளது. இது போன்று மற்றொரு பிரதி வேறு எங்கும் இருப்பதாக அறியக்கூடவில்லை. இருப்பினும் இந்த நூலைப்பற்றி அமரர் L. உலகநாத பிள்ளை தமது சேட்லாக்கில் இது இராசமன்னார் கோவிலுள்ள விஷ்ணுமீது பாடப்பெற்ற பள்ளுப் பிரபந்தம்.

நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இதன் கடைசிச் செய்யுளில் 'பாராளும் விசையராகவபூபனை பட்சத்துடன் நித்தம் காத்தவர்' என்று வந்திருப்பதைக் கொண்டு இந்நூல் தஞ்சையை அரசுபுரிந்த விசையராகவ நாயக்கர் காலத்தில் செய்யப்பட்டதாக ஊகிக்க இடமிருக்கிறது என்று கூறியுள்ளார். மேலும் இந்நூல் விசையராகவ நாயக்கர் காலத்தில் செய்யப்பட்டதாக ஊகிப்பதனால் அவர் ஆட்சிக்காலமான (1633—1673) 17-ஆம் நூற்றாண்டே இந்நூலின் காலமும் ஆகும் என ஊகிக்க இடமுள்ளது.

இந்நூல் முழுமை பெற்று 11 பாடல்களைக் கொண்டதாக இருந்தாலும் பாடல்களில் சிற்சில இடங்களில் பதங்கள் விடுபட்டுள்ளன. மேலும் இந்நூல் பள்ளு இலக்கியத்திற்குரிய சிற்சில பகுதிகளை மட்டும் பெற்று, ஒவ்வொரு பாடலும் "பள்ளீரே" என்று ஒரேவிதமான முடிபையும் பெற்று விளங்குகின்றது. பள்ளு இலக்கணத்திற்குரிய முழுப்பகுதியும் இந்நூலுள் கிடையாது மோகனப்பள்ளு என்பது தனிவகை நூலாகக் கருதமுடியாது. ஏனெனில் இந்நூல் இராசமன்னார்கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடப்பெற்றுள்ளமையால் பள்ளு இலக்கியங்கள் பெயர் பெறும் முறைப்படி இந்நூலும் பெயர் பெற்றிருக்கலாம். மோகனப் பள்ளு என்ற பெயரோடு வேறு எந்நூலும் இருந்ததாக ஆதாரமின்மையால், மோசனப்பள்ளு பள்ளு இலக்கியத்தின் தோற்றுவாய்க்குத் துணையாகவும் இருக்கமுடியாது. எனவே மன்னார் மோகனப்பள்ளு என்பது இராசமன்னார் கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப்பெற்ற நூலே தவிர, பள்ளிற்குரிய இலக்கண அமைப்பைப் பெறாமல் பள்ளு என்ற பெயரை மட்டும் பெற்று விளங்குகிறது என்று ஒருவாறு ஊகிக்க முடிகிறது.

உழவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்களிடையே நிலவிய பழக்கவழக்கங்கள் முதலியவற்றையும் சுவை நிறைந்த முறையில் எளிமையான மொழிநடையில் விளக்கும் இப்பள்ளு இலக்கியங்கள் பாமர இலக்கியங்களாக மிளிரும் மாட்சி பெற்றவையாகும்.

# * மன்னார் மோகனப் பள்ளு *

காப்பு

புத்தியும் புத்திக் கேற்ற பொறுமையு முதவிப் பின்னும்
முத்தியுந் தருமன் னார்மேல் மோகனப் பள்ளுப் பாட
எத்திசை தனிலு மன்பர் ஏதுரைத் தாலுங் கேட்டு
சித்தமே மகிழ்வார் ராசைச் செங்கம லத்தாய் காப்பாம்.

**

கூடிய அலையுண் டாய்ச்சி
கொல்கொடு அதட்ட வாயை
மூடிய மன்னார் பேரில்
மோகனப் பள்ளுப் பாட
சூடிய வெற்றி மாலை
துலங்கிடக் கீழை வாயில்
தேடியங் கமர்ந்த ராசை
திகழ்அனு மந்தன் காப்பாம்.

பூவிற் சிறந்திடு லட்சுமிமார்பா — இந்தப்
புவனம் பதினுன் களந்தவர்
பூமிபா ரத்தினைத் தீர்த்தவர்—அன்பு
புரிந்திடு மைந்தனைக் காத்தவர்

சேவிக்க வாழ்வுகொ டுத்தவர்—வாணன்
சிரம்வீழ வாளி தொடுத்தவர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த—மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

தாவிப் படர்முகில் கார்கடல்நீர்—தன்னைத்
………… ………… …………
………… ………… ………… …………
………… ………… …………

மேவிப் பரந்திடும் காவேரி—தந்த
வெள்ளப் பெருக்கில் திருக்கையை
………… ………… ………… …………
………… பாரடி பள்ளீரே. 1

**

அலைகட லின்கண் வளர்ந்தவர்—மறியில்
ஆய்ச்சியர் தட்டத் தளர்ந்தயர்
ஆவின் பிறகே திரிந்தவர்—அய்வர்
ஏவவே தூது புரிந்தவர்.

சிலைக்கையன் மதன யனையும்—பெற்ற
செங்கமல வல்லி நாயகா
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த—மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

பொலிமுக்கி மட்டையொரு கொம்பன்
பொங்கு சினத்தான் வயலதல[1]—விதங்க
பொலிப்பில் அடங்கி மயிலைக்—கறுப்பன்
கொம்ப னுழவுக் கிளையன்
விலைக்கடங் காத முன்னே—ரழகன்
வேடிக்கைப் பனங்காய்க் கறுப்பனும்
மிகுத்தமா டெல்லாம் மகிழ்ந்துதான்—பள்ளன்
உகந்து ழுகின்றன பள்ளீரே. 2

**

எண்டா ரணிய மளந்தவர் — புவியீ
ஏழு உருவ வளர்ந்தவர்
இலங்கா புரியை யழித்தவர் — வந்த
இரணியன் மார்பைக் கிழித்தவர்
திண்டோள் காவா யழகர் — தனிச்
சீலை யழகர் திருவழகர்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே
உண்டால் மணக்குஞ் சம்பாக் — கறுப்பன்
ஒழுகு புழுகு சம்பரனும்
ஓதரிய காடைக்கழுத்தன்கல் — லுண்டை
ஒப்பரிய திங்கள் பாலியும்
வண்டாருங் குறுவைக் குரையணக் — கத்தைக்
கார பசானமும் வளத்துடன்
வகைவிறை யெல்லாம் — பள்ளன்
தெளிக்கி றானடி பள்ளீரே. 3

---

1 பாடல் வரி சரியில்லை.

சந்ததம் வேயூதும் வாயினுர் — ஐவர்
(தமக்கா) னசகா யனுர்
தாதுசேர் கமலைக் கண்ணனுர் — நிற்றந்
தழைத்த காயாம்பூ வண்ணனுர்.

செந்திருவந் துறைநந்தர்
முகுந்தர் வைகுந்தர் நிறைந்த
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே.

சுந்தரி மகனைக் கண்ணைக்காட்டி — அவள்
தூங்கப்பள்ளனை வாடா யென்ருள்
(சோரி)டா வெற்றுரை சொல்லாதே — நீ
என்று நின்ருன் உனக்கு.

அந்தியம் பொழுதாய் நெல்லுவித்த — காசு
அஞ்சாறு தாரமென் றழைத்தான்.
... ........ ............... .............. ............
நமூவைப் பார்க்கிருள் பள்ளீரே. 4

**

நெஞ்சிற் கருணையுள்ள வீடணனுக்கு — நிதம்
வாழ வரம ளித்தவர்
நெட்டூரர் பாதகர் வஞ்சகர் — காண
நேரில் வாரா தெளித்தவர்.

செஞ்சொற் தமிழ்புனை சீதர — கேசவர்
செண்டலங் காரமுகில் வண்ணனுர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே.

வஞ்சிக் இளையவள் தஞ்சிநடு — கைக்கே
மாமுலை ஓடிப் பிடித்தான்
அடாவம்பா போடா வென்று ……………
இன்பமுடன் ………. கொண்டடித்தான்
அஞ்சிப் பயப்பட்டு கைகட்டிவாய் — புதைத்து
அறியாமற் சொன்னேன் பொறுத்துக்
கோவென அடுத்தது மாசை ……………
அடுத்தும் பாரு பள்ளீரே- 5

* *

பன்னாலை மீட்டு மகிழ்ந்தவர்—தம்மைப்
பணியாரை விட்டு நெகிழ்ந்தவர்
பகலை யிரவாய்ச் செய்தவர் ……….
……… ……… ………
செந்நெல் நிறைந்த வயலில்முத்—தினஞ்
சிறுசங்கு தவழ் நாட்டினர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த—மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே
மன்னி மகன்மெத்தப் பிலுக்கியே—முலை
குலுக்கியே வசந்தி மகனை
நெருக்கு ……… யுருக்குவான்—………
……… ……… ………
என்னை யேனடி நெருக்குறா—யென்று
துடிக்கச்சே அவளடிக் கச்சே
பள்ளன் இகழ்ந்ததும் கலை……—………,..
நெசிழ்ந்ததும் பாரும் பள்ளீரே. 6

வாலியை யோரம்பாற் கொன்றவர் — கலை
வாரிக் குருந்தேறி நின்றவர்
வடவாலிலே தனியே துயின்றவர் — …………
………… ………… …………

சேலினங் கயலைத் துரத்தவே — நலி
வாலினஞ் செழிக்கு நாட்டினர்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

கோலி வந்திடக்குப் பெரியாள் — சூலி
கொண்டை யிலேசேர்கை யப்பினள்
நடக்குனிந்து நின்றவள் நிமிர்ந்தவன் — முகம்
நிறைந்திட எடிதனுப்பினள் சின்ன

வேலிமகள் பாலி ……… பொற்தண்டைக் – காலியும்
பள்ளனைப் பிடித்துத்தான் சேற்றில்
மிதித்ததுஞ் சூலி குதித்ததும் — சண்டைக்
கதித்ததும் பாரும் பள்ளீரே. 7

**

ஒளிரிரா வணனை வதைத்தவர் — முன்னு
முறுதியாய்ச் சகடு தைத்தவர்
புகழ்ந்து பேய்முலை குடித்தவர் — அன்று
ஒருத்திக்காய் வில்லை யொடித்தவர்.

தெளிவுறு முன்னூல் மார்பினர் — என்று
தேவர் புகழுந் திருவினர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

வெளியிரு வருக்கிளைய வள்ளியும் — … … …
வரப்பாடிக் கதிர் கிள்ளியும்
வாதக்கால் வழியான் மகளுமாய்க் — கூட்டி
வன்னியடிப் பள்ளநடு கைக்கே

கிளிமொழி வள்ளிவாய் கிழியப் — பெற்றான்
கெஞ்சி யவட் சருவியே
கிட்டினதும் மெள்ளத் தட்டினதும் — அச்சம்
பட்டினதும் பாரும் பள்ளீரே. 8

**

கொத்தார் குழிப்ப ருடனே — கூடிக்
கோபால முனிக்காய் வந்தவன்
குலவு முனிசெய் வேள்வி — இறுத்திக்
* கூறறியவர் மீய்ந்தவர் ……….

தித்தாதா வென்று அரிபிடர் — மீதிற்
சிலம்பு கொஞ்சிட ஆடுவர்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

முத்தாரந் தஞ்சிக்குக் கொடுக்கச்சே — கொண்டைப்
பெற்றான் வந்து சண்டை தொடுக்கச்சே
மோகனச் சிந்துகள் படித்ததும் — பள்ளன்
தாகங்கேட்கக் கள்ளைக் குடித்ததும்

மத்தாரும் வேண்டேனென நடந்து — தான்
பள்ளன் மிக்காசையாய்ப் பின்னே
தொடர்ந்து தான்தஞ்சி வந்ததையும் - அங்கண்
சிவந்ததையும் பாரும் பள்ளீரே. 9

---

* பாடல் வரி சரியில்லை.

ஆனை யுயிர்தனைக் காத்தவர் — வெங்கராவைத்
துணித்து வினை செத்தவர்
ஆயிரம் பிழையும் பொறுத்தவர் — தமது
அன்பர் செய்பவத்தை யறுத்தவர்

தேனை நெல்வயலுக் இறைக்கவே — மடை
தேங்கவே சோழ நாட்டினுர்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

தானிக் குடங்கலைக் குடித்ததும் — நெட்டைத்
தெனிமகன் வந்து அடித்ததும்
சரபன செய்யவே தொடுத்ததும் — சிவன்
கற்பனை யென்றுதான் விடுத்ததும்

கூன மிருவன் மகளையீன்ற — நதிக்குக்
கொள்ளுவென விளைத்தள்ளு வேனென்று
குறித்ததும் மூத்தான் மறித்ததும் ம் கள்ளு
வெறித்ததும் பாரும் பள்ளீரே 10

**

பாராளும் விசைய ராகவ — பூபனை
பட்சமுடன் நிற்றங்காற்ற மணியு
மறுகு மயனுந் தரித்த — ..........
பானபெறுஞ் சாபந் தீர்ந்தவர்

தீராத வல்வினை தீர்த்தவர் — துரோபதை
செந்துகில் போகாமல் காத்தவர்
தெட்சிணைத் வாரகை பட்சம்வைத்த — மன்னர்
சித்தமெச்சும் பண்ணை வயலுளே

மோராமுலை முற்றுரெங்கிக் காசைகொண்டு - வெங்கிதனைச்
சந்து விடுத்தான் மூளி
வெள்ளையன் தங்கச்சி பெற்றியைத் — தன்மனம்
வேண்டாமல்த் துரும்புகொடுத் தான்புலிக்

கோராத தோவிது நடவெல்லாம் — நட்டு
இருவி வீட்டினில் இருக்கச்சே
துயர்எட்டி னதும் மெள்ளக் கிட்டினதும் — தாலிக்
கட்டினதும் பாரும் பள்ளீரே. 11

अनुबन्धः —

॥ श्रीः ॥

# ॥ शरभोजिचरितम्* ॥

॥ श्रीगणेशायनमः ॥

यत्सत्त्वैव जगत्सत्ता यद्भासा भासते जगत् ।
यदानन्दो जनानन्दः शं करोतु स शंकरः ॥ १

त्वामाहुर्वैष्णवांशं कतिचन धरणिपालनादेव हेतोः
मन्यन्ते केचिदन्ये रिपुपुरहरणादेव रुद्रावतारम् ।
सद्यो विद्याधिकेभ्यः शतगुणगुणितं वाञ्छितार्थप्रदानात्
आभ्यामन्यं वदान्यं शरभ ! विभुवर ! त्वामहं तर्कयामि ॥ २

रणाजिरे वरासिना निकृत्तशत्रुवाहिनी-
समुत्थितासृगापगां प्रतीर्य वाजिसंप्लवैः ।
अनन्यमानसा सतीव वीरमाऽनुरागिणी
भवन्तमेकभूपतेः सुतं समेत्य राजते ॥ ३

अर्थिभ्यः प्रतिपादयस्यभिमतं प्रत्यर्थिनः पातय-
स्यापन्नानवसि प्रसीदसि परं स्मृत्वैव संख्यावतः ।

---

* MSS. Burnell's Catalogue No. 1999. Paper - Sanskrit Dept.

सारासारविशोधने कवयतां शाणोपलोऽसि स्वयं
श्रीचोळक्षितिपाल! भोसलकुलालंकार! कस्ते समः? ॥ ४

प्रत्यर्थिक्ष्मापतीनां शरभ! विभुमणे!! संगरे संमुखानां
संहर्तुः खड्गघातात्तव रिपुकवचे तद्यशस्थूललग्नः ।
संजातः तद्वधूनां हृदयमधिवसन् संततं चिन्त्यमानैः
एधोभावं गतस्तैः पतिभिरनुदिनं वर्धते शौर्यवह्निः ॥ ५

मध्याह्ने वर्धमानद्युमणिकरगणप्रौढतापानुकारि-
त्वद्दोर्दन्डप्रतापप्रचुरहुतवहालीढदेहान्तरंगाः ।
त्वद्भीत्या सञ्चरन्ते गिरिसरिदटवीः शात्रवो निश्शरण्याः
श्रीमच्चेलक्षितीन्द्र! प्रभुवर! भवतो विक्रमं कः सहेत? ॥ ६

त्वत्तेजोरश्मिमालिन्युदयति शरभ क्ष्मावल्लारे त्वदीयं
चन्द्रश्रीर्वक्त्रमेति प्रसभमिति च तच्चन्द्रिका दन्तपङ्क्तिम् ।
नीलाब्जाभा च नेत्रे कचमथ तमसः कालिमा तारकाणां
शोभा हारस्रजं ते चयममि यशसां कैरवाणां सुमश्रीः ॥ ७

श्रीमच्चोळक्षितीन्द्र प्रभुवर भवतः कीर्तिसन्तानवल्ल्याः
बुध्नः शेषः, प्रकाण्डो भवभवनगिरिः भूमिरेवालवालम् ।
कीलालं दानतोयं कुसुममुडुगणः पल्लवः साम्ध्यरागः
जीवातुर्देवतानां फलममृतकरो लाञ्छनं तस्य वृंतम् ॥ ८

अभिमुखमुपयाताः शात्रवो योध्दुकामाः
तव करकरवाळछिन्नशीर्षाः पतन्ति ।
अदरतुरकवाटे गोपुरे दन्तिभग्ने
शरभनृप विहस्ताः पादमूलं भजन्ते ॥ ९

त्वयि सति समराय प्रस्थिते वाजिरूढे
प्रतिहतमतयस्ते शत्रवो योध्दुकामाः ।
ज्वलति समरभूमौ तावके पावकास्त्रे
शरभ शलभभावं प्राप्नुवन्तः पतन्ति ॥ १०

यदीयवाजिव्रजवालगुच्छ-
सञ्जातवाताळिखिलीकृतेषु ।
प्रदीपसेनाकदलीवणेषु
स केन जय्यः शरभोजिराजः ॥ ११

वितरणविक्रमरूपैः यत्सदृशौ
नास्ति निखिलवसुधायाम् ।
शरभक्ष्मापतिरेकः
कर्णं पार्थं च मन्मथं जयति ॥ १२

कल्पलताकामगवी-
चिन्तामणयोऽपि सन्तु वसुधायाम् ।
शरभजि वितरणभूम्ना
निर्जितनिजभावलज्जितैः किं तैः ॥ १३

यदियसेनापतिसैनिकानां
नासीरसीमानमुपेत्य विद्धाः ।
प्रतीपभूपाः प्रळयं प्रयान्ति
स केन जय्यः शरभोजिराजः ॥ १३

यदीयमातङ्गघटानिरुद्ध-

कवेरकन्यातटभेदबन्धम् ।

कर्तुं समर्थं प्रतियोद्धुकामः

कस्तं निरुध्याच्छरभोजिराजम् ॥ १४

यदीयदन्तावळदन्तकूट-

दलत्कवाटध्वनिभिन्नमानाः ।

प्रत्यर्थिभूपाः प्रणतिप्रमुक्ताः

स केन जय्यः शरभोजिराजः ॥ १६

शरभक्ष्मापसुधांशौ

सन्ततमवदातपक्षमवलम्ब्य ।

वसुवर्षिणि विबुधानां

न कदाचित् अमाविचारकथा ॥ १७

शरभक्ष्मापतिरेको

वितरति वसुधां विशिष्य विबुधानाम् ।

कालक्रमेण वितरन्

दाता चन्द्रोऽपि (न न)सुधामेकाम् ॥ १८

शुध्देतरेषु वितरन्

क्षीणः कृष्णो न दृश्यते चन्द्रः ।

शरभः क्षोणीपतीन्दुः

शुद्धः शुध्देषु सर्वदा वितरन् ॥ १९

शरभक्षितिपतिरेको-
विभु(बु)धानां तारतम्यमवगम्य ।
धरणीधनकनकाद्यैः
तनुते परितोषमादरेणैव ॥ २०

यद्दन्तिमदधाराभिः मखः सरिदालयाः ।
तस्य तञ्जापुरेशस्य महिमा केन वर्ण्यताम् (ते) ॥ २१

यद्वाजिखुरकुद्दालदलितं रिपुमण्डलम् ।
तस्य तञ्जापुरेशस्य कीर्तेः ज्या गोष्पदायते ॥ २२

यद्भीत्या प्रविलीयन्ते सिंहशार्दूलसिन्धुराः ।
शरभस्वामिनः तस्य बल्लूकानां जयः कियान् ॥ २३

कर्णभूषणदानेन कीर्तिं प्राप्नेपि शाश्वतीम् ।
अहो! चोळमहीपाल! जायते कर्णदूषणम् ॥ २४

अन्येषु भूमिपालाद्याः शब्दाः रूढाः विरोधिषु ।
सिंहेष्विव मृगेन्द्राद्याः भोसलेष्वेव योगतः ॥ २५

शरभक्षितिपे राज्यं परिपालयति स्वयम् ।
स्त्रीणां मध्यकुचेष्वेव कार्श्यकाठिन्योः स्थितिः ॥ २६

शरभोजिमहीपाले पृथिवीं शासति स्वयम् ।
स्त्रीणां भ्रूकुन्तलेष्वेव कौटिल्यं व्यक्ततामयात् ॥ २७

क्ष्मापालाचूडामणिना शरभक्ष्मापतीन्दुना ।
विद्वत्कुवलयामोदो वर्धते वसुवर्षिणा ॥ २८

विद्वन्मानसहंसानां शरभः शरदागमः ।
तत्सपत्नार्कवृक्षाणां जायते जलदागमः ॥ २९

अस्त्येवाऽद्य महीतलं पृथुफलं सप्तार्णवीवेष्टितं-
सन्त्येवात्र महीभुजोऽपि बहवः स्वार्थैकबद्धादराः ॥
किं तैः वैदिकमार्गविप्लवकरैः पृथ्वीभरैरादरात्-
एको धर्ममवैति साधु ! शरभक्ष्मापालचूडामणिः ॥ ३०

संख्यावतां दत्तवसुन्धरासु
मह्यं प्रदेया कियती समास्ते ।
तामाशु दत्वा शरभक्षितीन्द्र !
मनोरथो यः परिपूर्यतां सः ॥ ३१

त्यक्त्वा हस्तगतामिमां भगवतीं इष्टार्थदामुर्वरां
कान्तारं मृगतृष्णया जलधिया भ्रांत्वा पिपासार्दितः ।
श्रान्तोऽहं पुनरागतोस्मि शरभ ! क्ष्मपाल ! विद्वन्मणे !
दत्वा तां महितां चिराय वसुधां मां धर्मतः पालय ॥ ३२

शरभक्ष्मापभटानां धाटीसमयेषु घट्टिते पटहे ।
पाण्ड्यकवाटध्वनिभिः मिश्रा ध्वनयो विजृंभन्ते ॥ ३३

शरभक्ष्मापति धाटीवित्रस्ताः पाण्ड्यभूपभटसिंहाः ।
स्वगृहगुहामलभंतो लीयन्ते चोरभावमालंब्य ॥ ३४

शरभोजिमहीपाले ! समरे शरवर्षिणि ।
स्वयंवरस्थानमभूत् स्वर्वधूनां रणक्षितिः ॥ ३५

पदेषु प्रत्ययाभावात् एतावद्वीरतोचितम् ।
किं प्रयुज्य प्रशंसेयं शरभेन्द्रस्य विक्रमम् ॥ ३६

प्रतिग्रहीताप्यधुना ऽहमस्मि
दाता न चाऽन्योस्ति विना त्वया मे ।
कालप्रतीक्षा भवता न कार्या
वृद्धो यतो रिक्ततमश्च राजन् ! ॥ ३७

भगिनी तावकभवने
मातरमासाद्य तापसीवाऽऽस्ते ।
श्वशुरगृहं अभिलषन्तीं
प्रापय तामाशु चोळभूपाळ ! ॥ ३८

चोळक्षितितलनिहितां
शाहक्षितिपेन शरभजिनृपेन्द्र ! ।
विद्वन्मणिमयमालां
पूरय शिष्टेन पञ्चरत्नेन ॥ ३९

मुद्राक्षराणि विन्यस्य दत्तं यस्यास्ति शासनम् ।
न हि तस्य विपर्यासः इत्येतत्कौसलं मतम् ॥ ४०

कवित्वगुणदोषज्ञाः कृतिं पश्यन्तु मामिकाम् ।
पश्चान्निन्दन्तु नन्दन्तु तद्द्वयं मम भूषणम् ॥ ४१

सन्त्येवापातमधुराः प्रबन्धाः सुलभा भुवि ।
दुर्लभाः काव्यमर्मज्ञसंमर्दसहनक्षमाः ॥ ४२

रचितं शरभजिचरितं बृहदंबागर्भसंभवेनेदम् ।
मोदाय भवतु सुदृशां अनुरणितं शुकबालकेनेव ॥ ४३

वेगन्यास्तपदांबुजद्वयभराक्रान्तक्ष्मागौरव-
क्षोभाभ्यासमहस्रधाविदलिताः हि प्रौढचूडापदः ।
ब्रह्माण्डस्वरराङ्गघट्टनकराः निष्पिष्टदोषाकर-
छेदालंकृतमौळिः आदिमनटो मोदाय वोभोतु वः ॥ ४४

॥ अत्रिकुलतिलकायमानाऽऽनन्तरायज्वकुलसिन्धुकौस्तुभायमान-
कृष्णदीक्षिततुर्यतनयमृत्युञ्जयार्य(द्य) तनुसंभव
अनन्तनारायण नामधेय पञ्चरत्नकविकृतं
शरभजिचरितं समाप्तम् ॥

*

Ofter Colophon

लिखितं च मयैवेदं यथासामर्थ्यमात्मनः ।
सद्भिः समर्थ्यतां दोषो मदसामर्थ्यसंभवः ॥

जीवरत्नमवशिष्टमिहैकं
वर्तते गुरुरहस्यमपूर्वम् ।
काञ्चनेन परिवेष्य धृतं चेत्
शाश्वती तव भविष्यति कीर्तिः ॥

உ

# திருக்கடவூர்த் தலமகிமை

( திருக்கடையூர் )

ஸாஹித்ய சிரோமணி

திருமதி. **எஸ். இராஜலக்ஷ்மி,**

ஸம்ஸ்க்ருத பண்டிதர்,

சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.

शाकुन्तलसञ्जीवनाख्यटिप्पणे ॥

घनश्यामपंडित कोकिलासारखे काळे देह नव्हे. कोकिलपक्षीसारखे मन-रंजवून गायन करणार हा भावना स्वता पंडितांसचहोते. हे उद्धेशून इतरजन कशयाला असूया चिंतावे ह्मणून बालतात :-

'तनुरुचि यो नश्यामः कविः कविनां स यदि घनश्यामः-
कवने कमनश्यामः किमसूयाभिर्मुधैव नश्यामः' ॥
-उत्तररामचरित संजीवनी

आणी त्याच ग्रंथांत त्यांचे स्वता जन्मकुंडली व जातकाचे माहिती देतात ते पहावे :-

"लग्ने कीटे झषेष्वासनदलनिलयौ भूजकेतूजनूर्ह-
यंशे काव्योऽथ नक्रे क्रियघटकांशेषु सौम्येन चन्द्रः ॥
सौरिर्मेषे तुलांशे वृषमिथुनदले सैंहिकेयोऽथ जीवः
कौलीरे सिंहभागे ह्यलिधनुवनमांशे यदियोऽवतारः" ॥

'घनश्यामपंडित एक चमत्कारिक कवि' ह्मणून पहिले संस्कृत वाचकांला दर्शूवून दिल्या तो Dr. E. Hultzsch. Ph. D., त्याचा 'Reports on Sanskrit Manuscripts in South India' चा द्वारा तो त्याचा लेखांत पंडिताचे सर्व-कवित्वाबदलची माहिती पूर्ण दिलाआहे. त्याचानंतर 'The Journal of Oriental Research. Madras - 1929. ह्यांतील लेख 'Pandita Ghanasyama A Poet Minister of King Tukkoji' (Tulaja - I) of Tanjore - (1729—1735) by V. A. Ramaswamy Sastri. B. A. (Hons.,) Mimamsa

Siromani, Lecturer in Sanskrit, The Annamalai University, Chidambaram' ह्यावरुन सर्व माहिती समजून येतें.

आतां घनश्यामाबद्दल येथे दिलेले सर्वबृत्तांत वर जाणविलल्य आंग्रेज जर्नलाचे आधारावरच सांगण्यांत आले.

घनश्यामाचे हे ग्रंथें सर्व तंजावर मराठी व संकृत विध्वान 'जंबुनाथ-भटलांडगे' ह्यांचे संग्रहावरून 'तंजावर सरस्वतीमहाल' ग्रंथालयाला पावतीझाला आहे.

आतां घनश्यामपंडिताचे पंचेवीस संस्कृत ग्रंथें हे ग्रंथालयांत आहे त्यांत पांचग्रंथें आतापर्यंत प्रसिद्धझाला आहे.

घनश्यामपंडितांने 'षण्मुखलीला' हे लहान ग्रंथ प्रसिद्धकरण्यांत येते. ते 'षण्मुखलीला' ह्मणजे परमेश्वरपार्वतीचे कुमार कार्तिकेय होय. ते कार्तिकेयाला तमिळनाडूंत 'आरुमुगन्' ह्मणतात. आरुमुगन् ह्मणजे 'षण्मुख' सहामुख असणार असे होतात. त्याला विशेषवर्णी 'मुरुगन्' ह्मणतात - 'मुरुगु' ह्मणजे 'सुंदर' ह्मणून अर्थ होतात. ते मुरुगन् देव तमिळनाडूंत त्यालोकास विशेष आराध्य दैवत असून त्याला सहा जागेंत देवुळें निर्माण झाला आहे. त्या सहा जागालाही मिळून एकंदर. 'आरुपडैवीडू,' ह्मणून विशेष वर्णन आहे.

'कार्तिकेय' ह्मणावयाचे षण्मुखदेवाला महाराष्ट्रांत लग्न झाल्यासारिखे इतिहास नाही. तर तमिळनाडंत त्यांना लग्न झाल्या सारखें इतिहास अहे. त्या मुरुगनाचे संबदित. कांहि माहिती येथे वेगळे जागेंत आंग्रेज भाषांत वाचकांचे सोईसाठीं दिली आहे त्यापासून सर्व माहिती समाजून येईल.

तें 'षण्मुखलीला' ग्रंथ प्रसिद्धकरण्यांचे द्वारा एकमोठा मराठीकविबद्दलची माहिति कळवावया ह्या इच्छेने येतें हे लेख लिहिण्यांत आले. हे ग्रंथ प्रसिद्धकरणेस मला संधी मीळाले त्याबदल मी अति संतोष मानतों. आतां महाराष्ट्र वाचकबंधूजनास कवीचे साहित्यरस पान करणेस वेळ देवून येथून विराम घेतों.

घनश्यामपंडित कृत

# षण्मुखलीला

पद

आला जो खळरण काजे
ज्याचा भुजदंडही खाजे
रणी त्या दनुज्या झणि दंडुनि गाजे
प्रभु षण्मुख साजे ॥ १ ॥

ज्याचे पाहुनि मुखताजे
लाह्यापरि तारक भाजे
धालों विधि माघवितो बहु माजे
प्रभु षण्मुख साजे ॥ २ ॥

लीलामंडपि व्रतराजे
प्रणय तरुणीद्वय लाजे
गाता घनश्याम सुदुंदुभि वाजे
प्रभु षण्मुख साजे ॥ ३ ॥

पद्

न कधीं जो मोहरसांचि
न भज स्थिती मोहरसाचि
धरी जो शुभ बुद्धितमोहरसांचि
जनि सफळ तयाचि ॥ १ ॥

हउस जो बहुतरवारिं
वदतों मी तत्र बहुतरवारि
हृदईं विषयार्णव बहुतरवारि
नर तोच मुरारि ॥ २ ॥

मानि जो नव सुकुमारि
न जडे मानव सुकुमारि
विनवी घनश्यामचि नत्र सुकुमारि
रणी त्या निरत पुरारि ॥ ३ ॥

दरु

आणी अमृतवल्ली कनकवल्ली वराते ॥ ध्रु० ॥

शुभविचार सदुपचार - कोमलसंचार परिचार
समवेत साजणी ॥ १ ॥

निरुपकार सदुपकार - राजदळकार अधिकार
रमणीय तरुणी ॥ २ ॥

मृदुविहार सदुपहार - तारकसंव्हार मणिहार
कमनीय रमणी ॥ ३ ॥

सुरवंजिर समंजिर - देउनि अंजिर हाजिर
रतिसुंदर झाणी ॥ ४ ॥

इतर काम तेजुनि काम - पाळि ममिकाम रुचिकाम
घनश्याम धरणी ॥ ५ ॥

आलस्य फार मजला बहु बुद्धिनाही
चातुर्य ध्याननाही आर्जव शक्तिकाही
म्या चिंतिताचि मज सन्निध जाहलासी
वल्लिप्रिया नमिन मी तुज भक्ति देशी ॥ -१

दरु

भक्तानि जे मनी वांछिले - देशी ते फले
कायवानु मी तुते ॥ १ ॥

गुण तुझे वर्णावया काहीं - अपटु शेषहीं
झाला लज्जित हृदईं ॥ २ ॥

श्वान नदाविनासारिखें - त्यजुनी कौतुकें
नित्य पाताळी आहे ॥ ३ ॥

अल्प माझीबुद्धि केवढी - तुच्छ आपुढी
कारि निर्व्याज दया भक्तानि ॥ ४ ॥

इंद्रादिदेव बहुवैभव भोगिती जें
दैत्यासि भीत अवल्यापरि धांवताजें
त्या सर्वदैवत गणास सुखीकराया
गौरीहरासि जाहलासि कलाहराया ॥ -२

दरु

करि दया त्रिनेत्र षण्मुखा - विश्वपालका
बाण कार्मुखवज्र ॥ १ ॥

शक्तिखांड खेटकुक्कुट - शूलउद्भट
गदापद्म अभय ॥ २ ॥

वर दे धरकर द्वादशें - करिति सहासें
देवशेना वल्लीशा ॥ ३ ॥

विचित्र मयूरवाहना - गौरिनंदना
नित्य सांभाळि आह्मा ॥ ४ ॥

सारे दिशापति रणि पाहतें जयातें
त्रासें सकंप थरिताति दिशा भ्रमातें
तो शूरपद्म पहुशूर समेत भारि
आला पुरा तुझे पुट सुरलोकवैरि ॥ -३

दरु

लोका लोकाचेलवि श्रुता - विबुध सन्नुता
शूरपद्मासुराचे ॥ १ ॥

पाहुनि घोर आगमन - देवगमन
शक्ति हाति तां धरिली ॥

अग्नींत टोळ सांपडे - तैसा तो जडे
तु तवें वेंटीत आला ॥

ते क्षणि स्वहस्त जोडुनि - गुरु वंदुनि
चक्रें प्रयोजिलें ॥ ३ ॥

ते थोर तन्मौळि भेदुनि - पुन्हा येउनि
तुझाकरि शोभले ॥ ४ ॥

रामायणादि रणखेळण बालयाचें
जे यापरि ह्मणतसे घ × आभ्दुताचें
ते युध्दे होत आसतां गुहतारकांला
नौ कोटि ब्रह्मयुग दैत्यें अशक्तझाला ॥ -४

दरु

शक्ति कोटि घंटा घेउनि - स्कंद योजुनि
संव्हारिला तारक ॥ १ ॥

इंद्रविष्णुविधी . तारिले - लोक स्तविले

ऐशी 'षण्मुखलीला' ॥ २ ॥

काशिमहादेवनंदन - कीर्तीमंडण

तुळजाराजेंद्र मंत्री ॥ ३ ॥

श्रीसुंदरिकमलापति - कविभूपति

घनश्याम विनवी ॥ ४ ॥

इति षण्मुखलीला वर्णन.

பதினேழாம் நூற்றாண்டில்

# தஞ்சையில் பரதநாட்டியக் கலை

**நா. விசுவநாதன்,**
தெலுங்குப் பண்டிதர்.
*சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

தஞ்சையை ஆண்ட இராஜராஜன், இராஜேந்திரன், குலோத்துங்கன் போன்ற சோழ அரசர்கள் இசைக் கலைக்கும், நாட்டியக்கலைக்கும் புத்துயிர் அளித்தனர். தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் இசை நாட்டியக் கலைகளை வளமாகப் பாதுகாத்துப் புத்துயிர் கொடுத்தனர் என்பதில் ஐயமில்லை.

இசைப் பாடல்களால் ஆலய வழிப்பாட்டினையும், இறைவனைப் போற்றும் வழி வகைகளையும் சிறப்புடன் நாட்டு மக்களுக்கு நல்கியவர்கள் தஞ்சையை ஆண்ட மன்னர்கள் என்றால் மிகையாகாது.

தஞ்சை நாயக்க மன்னர்கள் வைணவ பக்தி நெறியில் நின்று ஆலய வழிபாட்டினைச் செய்தவர்கள். தஞ்சை மராட்டிய மன்னர்கள் சைவ பக்தி நெறியில் நின்று, சிறப்பாக அத்துவைத மார்க்க நெறியில் நின்று சைவ வைணவ ஆலய வழிபாட்டினைச் செய்தவர்கள்.

மராட்டிய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் சகசி என்கிற சாஹஜி ராஜா. இவர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தஞ்சையை அரசாட்சி செய்தார். இவர் திருவாரூரில் வீற்றிருக்கும் தியாகேசப் பெருமானின் பக்தர். அத்துவைத மார்க்க நெறியில் நின்றவர். பல மொழிகளில் இசை நாட்டிய நாடகங்களை இயற்றியவர். விஷ்ணுப் பல்லக்கு நாடகம், சங்கரப் பல்லக்கு நாடகம் என்பவை இம்மன்னர் யாத்த சிறந்த இசை நாட்டிய நாடகங்கள்.

இம்மன்னரது காலத்திய பதசாகித்தியங்கள் 300க்கும் மேல் கிடைக்கின்றன. அவை வடமொழி, தமிழ், தெலுங்கு, மராட்டி முதலிய மொழிகளில் உள்ள பதசாகித்தியங்களாகும். இவரது காலத்திய இசை நாட்டிய நாடகங்கள் 32க்கு மேல் கிடைத்துள்ளன. அவைகளில் நாட்டிய சாகித்திய உருப்படிகள் பல இடம்பெற்றுள்ளன.

சாஹஜி ராஜா, சோழநாட்டில் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளின் பேரில் சிருங்கார பதசாகித்தியங்கள் இயற்றியுள்ளார். அவை யாவும் அன்று நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம் பெற்ற உருப்படிகளாகும். தியாகேசா, தியாகா, சாஹநுத என்னும் முத்திரைகள் அப்பத சாகித்தியங்களில் அமைந்துள்ளன.

சாஹஜிராஜனுக்கு முன்பாக பதசாகித்தியங்கள் இயற்றியவர்கள் இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர், க்ஷேத்திரக்ஞர் போன்றவர் ஆவர். க்ஷேத்திரக்ஞரின் பிரபாவம் சாஹஜியின் பதசாகித்தியங்களில் காணலாம்.

இம்மன்னரது அவைப் புலவர்கள். வாசுதேவகவி, இராமபாரதி (தமிழிசைக் கவிகள்) கிரிராஜகவி, ஸோமகவி, பலகவி சுப்பண்ணு (தெலுங்குப் புலவர்கள்) திரயம்பகர், துண்டிகவி, உருக்குமாங்கத கவி (மராட்டியப் புலவர்கள்) போன்றவர், தமிழ், தெலுங்கு, வடமொழி. மராட்டியமொழிகளில் பல சிருங்காரப் பதங்களை மன்னரின் பேரில் இயற்றிருக்கிறார்கள். அந்நாளில் இப்பதங்கள் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் பயன்பட்டன.

சாஹஜி மன்னர் சங்கீதக் கலைக்கும் பரதநாட்டியக் கலைக்கும் செய்துள்ள சேவை மகத்தானது. இவர் காலத்துப் பதசாகித்தியங்கள் அனைத்துமே வெளி வந்தால் பல நாயிகா நாயகாம்சங்கங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். / இம் மன்னர் இயற்றிய பதங்கள் திராட்சா பாகம்.

சாஹஜியை பின்பற்றி இவருக்கு பின் தோன்றிய தஞ்சை மராட்டிய அரசர்கள் மற்றும் மராட்டியப் புலவர்கள் சிருங்காரபத சாகித்தியங்கள் பல தமது மொழியில் இயற்றினர். முதன்முதலில் தஞ்சையில் மராட்டிய மொழியில் இசை நாட்டிய நாடகங்களை உருவாக்கியப் பெருமை சாஹஜி மன்னரையே சாரும். மராட்டிய அறிஞர்கள் கூட இவ்விஷயத்தை ஒத்துக் கொண்டுள்ளார்கள்.

## தஞ்சை பரத நாட்டியத்தைப் பற்றியக் குறிப்புக்கள் :

விஜயராகவநாயக்கர் காலத்திய நூல்களில் பரதநாட்டியக் குறிப்புக்கள் பல இடம் பெற்றுள்ளன. சாஹஜி மன்னர் காலத்திய நூல்களிலும் பரத நாட்டிய வளர்ச்சி பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவ்வனைத்து நூல்களின் ஆதாரத்துடன் தஞ்சை பரத பாரம்பரியத்தைக் கணக்கிடலாம். அந்நாளில், பரதநாட்டிய நிகழ்ச்சி நிரல் எவ்வாறு இருந்திருக்கலாம் என்னும் கேள்விக்கு விடையும் கிடைக்கிறது.

நாயக்கர் காலத்துப் படைப்புக்களில் ஜதி, ஜதிஸ்வரம், ஸ்வரஜதி, சொல்கட்டு முதலியன கிடைக்கவில்லை. ஆனாலும் விஜயராகவ நாயக்கருக்குப் பின் சுமார் 30 வருடங்களுக்கு பிறகு தஞ்சை மராட்டிய மன்னர் சாஹஜியின் படைப்புக்களில், ஸ்வரஜதி சொல்கட்டு, ஜதிஸ்வரம் முதலியன கிடைக்கின்றன. அதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு தஞ்சையின் பாரம்பர்யம் எவ்வாறு இருந்தது என ஊகிக்க முடிகிறது.

சாஹஜிராஜன் காலத்திய நாட்டிய நாடகங்களில், தோடய மங்களம், மங்கள தரு, சரணுதரு, சலாம் தருக்கள், சர்வாததரு, ஏலபதங்கள், கீதப் பிரபந்தம், பதம், திவிபதை, ஸீஸபத்யம், கந்தபத்யம், துருபதம், சூர்ணிகை, தண்டகம், முதலிய உறுப்புக்கள் உள்ளன. தியாகராஜ விநோத சித்ர பிரபந்த நாட்டிய நாடகத்தில் இராகமாலிகை, தாளமாலிகை, சிம்மநந்தன பல்லவி, நவரத்தினப் பிரபந்தம்,ராமாயண ஸ்வாதிக்ருதி,சப்ததாளசூளாதி பிரபந்தம், சப்ததாள கீதபிரபந்தம் பஞ்சதாள பிரபந்தம், அனுலோமக் கிருதிகள், த்விபாஷா, த்ரிபாஷா தருக்கள், ஜக்கிணி தருக்கள், ஸ்வராக்ஷர தருக்கள் முதலியன இடம் பெற்றன.

தியாகேசப்பதங்களில், அர்த்தநாரி வர்ணனை, ஹரிஹரவர்ணனைகளும், குஸுமம், பறவைகள், நவரத்தினங்கள், நவக்கிரகங்கள், இராசிகள் முதலிய வைகளோடு தேவிகமலாம்பாளின் அங்கஅவயவங்களோடு ஒப்பிட்டுவர்ணனை செய்த் சாகித்தியங்களும் இடம் பெற்றுள்ளன. இவ்வனைத்து உறுப்படிகள் அந்நாளில் பரதநாட்டியத்தில் இடம்பெற்றன எனக்கூற முடிகிறது.

தியாகராஜவிநோத சித்ரபிரபந்தம், பஞ்சரத்தினப் பிரபந்தம் போன்ற நாட்டிய நாடகங்களில் பலராகங்களில் மேலே குறித்த உருப்படிகள் காணக் கிடைக்கின்றன. பஞ்சரத்தினப் பிரபந்தம் ஒரு நாட்டிய நாடகம் மட்டுமல்ல, அந்நாளில் நிகழ்ந்த **"பரத நாட்டியக் கச்சேரி"** என்று தான் கூறமுடிகிறது. பஞ்சரத்னப் பிரபந்த நாடகத்தில் முதன் முதலில் திரைஇசையாகத் தோடய மங்களம். மங்களதரு, சரணதரு போன்ற தருக்கள் பாகவத சம்பிரதாயமாகப் பாடப்படுகின்றன. பின்பு சலாம் தரு, ஸ்வரஜதி, சொற்கட்டு, ( அலாரிப்பு ) விஜயகர் கௌத்துவம், பதாபிநயம், முடிவில் ஜக்கிணி தருக்களோடு நட்டு வாங்க நாட்டிய நாடகம் முடிவுறுகிறது. இவ்விருபிரபந்தங்களையும் பரதநாட்டிய வளர்ச்சிக்குச் சான்று நூல்களாக நாம் கணக்கிட வேண்டியது அவசியமாகும்.

பஞ்சரத்தினப் பிரபந்தம் என்னும் நாடகம் கதையற்ற நாட்டிய நாடக மாகும். வீதிவிடங்கப் பெருமான் சபாநாயகனை வீற்றிருக்க அரங்கில் சகசி மன்னர் காலத்திய நாடகசாலை நாட்டிய விருதுகள் பெற்ற பெண்கள் பல வேடங்களில் நாட்டியக் கச்சேரி நடத்தும் விதமாக அமைந்த நாடகமாகும்.

ஒரு நாட்டியப் பெண் ஒருமணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ தான் நாட்டியமாடலாம். அன்றும் இன்றும் இப்பழக்கமே உள்ளதை பஞ்சரத்தினப் பிரபந்தத்திலும், 'கதக்' என்னும் வடக்கத்திய சம்பிரதாயத்திலும் காணலாம்.

சாஹஜி ராஜாவுக்கு முன்பு தஞ்சையில் பரத நாட்டிய சம்பந்தமான குறிப்புக்கள் எவ்வாறு இருந்தன என்பதனைக் காண்போமாக. இரகுநாத நாயக்கர் காலத்தில் இக்கலை மிகவும் சிறப்புற்று விளங்கின. விஜயராகவன் காலத்தில் இக்கலைவளர்ச்சி மேற்கூறிய பாணியிலேயே வளர்ச்சியுற்றன. இரகுநாத நாயக்கரின் நாட்டிய வளர்ச்சி சம்பந்தமான நூல்கள் கிடைக்காத தனால் இக்கலை வளர்ச்சியைப் பற்றி விபரம் ஏதும் கூற முடியவில்லை. விஜய ராகவன் காலத்தில் கிடைக்கும் நாட்டியக் குறிப்புகளை கீழ் காணும் விதமாகக் காணமுடிகிறது. தஞ்சை நாயக்கர்களின் வழிவகையும் விஜயநகரத்து அரசர் களின் வழிமுறையும் ஏறக்குறைய ஒருமித்த வழிவகை எனவும் கூறமுடிகிறது.

'ஜக்கிணி' என்னும் தேசீய நாட்டிய வகைப்பற்றி மதங்கர் தனது நூலில் குறிப்பிடுகிறார். இவர் வாழ்ந்த காலம் B. C. 4 -ஆம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்[1].

ஜக்கிணி என்ற நாட்டியம் மதங்கர் காலத்துக்கு முன்பிருந்தே மக்களிடம் செல்வாக்கைப் பெற்றும், நாட்டியம் ஆடப்பட்டும் இருந்தது என்று கருத இடமுள்ளது. ஆனால் விசயநகர நாயக்க மன்னர்களின் ஆட்சி காலத்தில் எழுந்த நூல்களில் தான் ஜக்கிணியைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆகவே 16 ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலும் ஜக்கிணி நாட்டியம் மக்களிடையே பழைய செல்வாக்கைப் பெற்றிருத்தல் வேண்டும். இராமாப்யுதயம், இரகுநாத நாயகாப்யுதயம், போன்ற தெலுங்கு நூல்களில் ஜக்கிணியைப் பற்றியக் குறிப்புக்கள் காணலாம்.

16 ஆம் நூற்றாண்டு இராமாப்யுதய நூலாசிரியர் ஐய்யலராஜு இராமபத்ர கவி. படலம் 2. பாட்டு 131. (Ref. Dr. S. V. Jogarao, Andhra Yakshagana Vangmaya Charitra P 39).

---

1. Matanga wrote Brihaddesi. Though apparently meant to deal primarily with Desi Music,......... a species called 'ZAKKINI' and when speaking of the latter kali is described as having requested her Matangamuni to create the new device. In the Tamil epic Silappadhikaram now generally assigned not latter than 4th century B. C. Matanga as a writer on music and dancing is mentioned. (Foot note Ref. Pura devi Mahakali lasitum Sambhunasaha — Janakam prekshya paprachcha Matangam diptatejasam..............., Kalikayah krita purvam Matanganaiva JHAKKINI, B.T.C. No, 11536.) M. Krishnamachariar. History of classical Sanskrit Literature 1937, pp. 823 and 824.

அணு நிப மத்ய லாக்ரியலு நா பரிபாஷலு நொப்ப சிந்துஜக்
கிணி குறவஞ்சி மேளமுல கேளிக ஸல்பிரி தேவதா நட
மணுலகு பொம்ம வெட்டுக்ரிய மர்தள தாள நிநாத பத்ததின்
ரணதுரு ரத்ன நூபுர ஜணம் ஜணமுல் மெறயங்ம் பதாஹதின்.

பல நூற்றாண்டுகள் மறைந்தும் நலிந்தும் வந்த ஜக்கிணிவகை நாட்டியம் விஜயநகர நாயக்க மன்னர்களின் காலத்தில் மறுமலர்ச்சி யடைந்தது என்பதை உறுதியாகக் கூறலாம். ஆயினும் பல ஆண்டுக் கால மாக மறைந்திருந்த ஜக்கிணி நாட்டியவகைதான் 16 ஆம் நூற்றாண்டில் ஆடப்பட்டதா அல்லது அதே மரபைக் கொண்டு தான் ஆடப்பட்டதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

மேலும் மதுரை, தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் காலங்களில் ஜக்கிணி நாட்டியம் ஆடப்பட்டது எனச் சான்றுகள் கிடைக்கின்றன. மன்னர் விசயரகவ நாயக்கர் ( 1633 - 1673 A. D., ) காலத்திய நூலான இரகுநாத நாயகப்யுதயமு என்னும் நூலில் ஜக்கிணியைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

" பிருது பாத்ரலு விஜ்ரும்பிஞ்சி யாராஜ
வருணி முந்தற நில்வ வாரிலோபலனு
பதசாளி கொனியெ ரூபவதீவதூடி
கொதலேக பேரணி கொனெ சந்தரரேக
மிக்கிலி கோபுல மெறவடிஜூபி
ஜக்கிணி விநிபிஞ்செ சசிரேக யபுடு
நநபோடி யகு லோக நாயிகா காந்த
வனஜலோசன கிரவாணி லதாங்கி
துருபத கேளிக துருஸைன கோபு
வருஸ நடிஞ்சிரி வன்னெ மீறகனு
குறவஞ்சி சிவலீல குஜராதி தேசி
விரிபோண்ட்லு கொந்தறு வினுபிஞ்சிரபுடு. "

இம்மன்னனுடைய காலத்தியப் புலவர் செங்கல்வ காளகவி என்பவர் இராஜ கோபால விலாசம் என்னும் நூலை இயற்றினர். அந்நூலிலும் ஜக்கிணியைப் பற்றியக் குறிப்பு உள்ளது.

சௌபத சேளிக ரூபவதீ காந்த
சப்தசூடாமணி சந்தரரேக
செலுவகு ஜக்கிணி ஜெலுவமூர்திவதூடி
குறமு கோமலவல்லி குருநிதம்ப
நவபம்தபுலு லோகநாயிகா லோலாக்ஷி
யலதேசி சசிரேகி காப்ஜவதன
துருபதம்புலு ரத்னகிரிநிதம்பினியுனு
பேரணி விதமு பாகீரதியுனு
மதனபலதூத்ய நவரத்னமாலிகாதி
பஹுவிதலக்ஷ்ய நாட்டிய பிரபஞ்சமெல்ல
கனதவிலஸில்ல தக்கின காந்தலெல்ல
நபினயிஞ்சிரி தமநேர்பு லதிசயில்ல

மற்ரொரு சான்று இரகுநாதநாயகாப்யுதயம் முகவுரை பக்கம் 45.

வால்விசி குஜ்ஜரி வில்வேடு தண்டலா
ஸ்யமுகந்துகக்ரீட யல்லிகயுனு
குறவஞ்சி சூடலீல குஜராதி தேசிசௌ
பதமுஜக்கிணி துருபதமு மதன
பதெளத்யமுனுஜோகி பதசாளி சாரதா
ஸாம்ராஜ்யமுனு சிந்துஸ்வதிமச்ச
ரம்புலு நாட்யகதம்பம்பு மொதலின
நாட்யமுல் ஹவணிஞ்சின.

மன்னன் விசயராகவ நாயக்கர் காலத்தில் இந்நாட்டியங்கள் நடந்துள்ளன எனவும் நன்கு தெரிகிறது. அதாவது மன்னனுடைய அவையில் ரூபவதி, சண்பகவல்லி, மூர்த்தி, கோமலவல்லி, லோகநாயிகை, சசிரேகா, ரத்னகிரி, பாகீரதீ போன்ற நாட்டியப் பெண்கள் முறையே சௌக்கக்காலபதம், சப்த சூடாமணி பிரபந்தம், (சிறந்த சொற்கட்டு) ஜக்கிணி பிரபந்தம், குறவஞ்சி பிரபந்தம், புதிதாக வந்துள்ள பதங்கள், தேசிப்பதங்ககள், துரு பதங்கள்(தரு) பேரணி நாட்டியம் போன்ற சாகித்திய உருப்படிகளுக்கேற்ப நாட்டியமாடினர் என்பதறிய முடிகிறது.

மேலும் வாள்வீச்சு நடனம் குஜ்ஜரி நடனம், குஜராத்தி நடனம், தண்டலாஸ்ய நடனம், கந்துகக்ரீடை என்கிற பந்தாட்ட நடனம். குறவஞ்சி நடனம், சிருங்காரப் பதங்களுக்கேற்ப அபிநய நடனம், தரு பதங்களுக்கேற்ப நடனம், விரக பதங்களுக்கேற்ப நடனம், சிந்துப்பதங்களுக்கேற்ப நடனம், சக்களத்தி எதிர்வாதம் செய்யும் அபிநய நடனம் முதலியன நிகழ்ந்துள்ளதையும் நாம் கவனிக்கத் தக்கது.

நாட்டியக் கதம்ப நிகழ்ச்சிகள் கூட அந்நாளில் நடந்தமையை நினைவு கூறுதல் வேண்டும். இவ்வாறு மன்னன் விஜயராகவ நாயக்கர் காலத்திய நாட்டிய மரபு இருந்ததாகத் தெரிகிறது. சரஸ்வதி மகால் நூலகச் சுவடியிலும்[1] கீழ்காணும் செய்திகள் இருப்பதை காண்க.

1. ஆரியக் கூத்துத் துலுக்கு துலுக்கச்சி அங்கதற்பின்
சீரிய தாகுந் தரவேசி சக்கணி சேர்ந்த நிலை
பேரியல் தானஞ் சதி சிந்து ராகம் பிறகு மண்டி
கூரிய ஆயுதம் முன்னோர் சொல் நூல் வழி கூறுவமே.

2. கூறு மியக்கப் பெண்கூத் தாகுந் சக்கிணி கொள்ளுநிலை
வீறிய தாகும் வயிணவ மண்டலம் மேறப் பெண் பெறு
மருளி அட தாளஞ் சிந்து பெறு மெலிலாம்
வாறிருகை கட்கார் முக மாக கலந்தனரே.

3. வகுத்துச் சொல்லாயுதங் குஞ்சந் தடிதப்பு வண்சிறகு
மிகுந்த சிங்காடி போந்தகைக் கோப்பரிசையும் வெட்டுகைவாள்
பகுத்திடு நேர்சங் கடற்சமுதாடு படைக்கல மாய்த்
தொகுத்து நவின்றனர் முன் பரதாகமஞ் சொல்பவரே.

இன்றுள்ள தில்லானா நிகழ்ச்சி அன்றுள்ள நாட்டிய நிகழ்ச்சியில் இடம் பெறவில்லை. நாட்டியத்தின் கடைசி நிகழ்ச்சியாக ஜக்கிணி தருவே இடம் பெற்றது எனவும் எண்ணத்தக்கது. ஜக்கிணி தருக்கள் மறைந்து அதற்குப் பதிலாக தில்லானா தருக்கள் பிற்காலத்தில் பரத நாட்டியத்தின் கடைசி நிகழ்ச்சியாகவும் இடம்பெற்றுள்ளது.

---

1 சரஸ்வதி மகால் நூலகத் தமிழ்ச் சுவடி அகர வரிசைப் பட்டியல் எண். 621, 638, பக்கம் 519.

பஞ்சரத்தின பிரபந்தத்தில் உள்ள தத்தகாரம், சொல்கட்டு, ஜதிஸ்வரம், பதம், தரு, முதலியன நாட்டிய நூல்களில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளதெனக் காண்போம்.

பரத நாட்டியம் தொடங்குகிறது. தோடயமங்களம், சரணுதரு மங்களதரு, முதலிய மங்களாசரண சம்பிரதாயத்துடன் ஆரம்பிக்கப் படுகிறது. அதன் பிறகு சபை முன்பாக விருதுடைய நாட்டிய பெண்கள் மேடையில் தோன்றுகின்றனர். நட்டுவாங்கத்தினர் தத்தகாரம் சொல்லுகின்றனர்.

# தத்தகாரம்

ஜகஜக — தத்த தத்த தாந் தத்தத்தா,
தோதிகி தாந் தந்தந் தாம் —
தாங்கத்தோங் கிடதக தரிகிட —
தந்தந்தி தாந்தி தக்கி —
தோம் தோங்கத் தோந்திக்கி தக்க —
தோந்தக தகதிகி தந்ததாம் —
தகதிகி தந்ததாம் —தொந்தக தகதோம்,
தக தகதோம்—தொதிகிதம் தொதிகிதம்த்தாம். || 1 ||

தை தத்தத்தா—தொதிகிதீந்—திந் திந் தீந்—
திங்க தோங்கிட தக தரிகுடு—திந் திந் திந் திந் த தக்க
தோம் தோங்க தோந் திக்கி தக்க—
தொந்தக தகதிகி—திந் திந் தீந்,
தகதிகி திந் திந் தீந்—தொந்தக தகதோம்—
தகதகதோம்—தோதிகிதிந் தோதிகிதிந்தீந்-த்த—
தோதிகி திந்தீம் || 2 ||

தைதத்தத்தா—தொதிகிதாம்—தந்தந்தாம்—
தாங்கத்தோங் கிடதக தரிகுடு—தந்தந்திதாந் தித்தக்க—

தோங் கத்தோங்கத்தோந் திக்கிதக—
தொந் தகதகதிகிதந் தந்தாம் ॥ 3 ॥

தோதிகிதிந்—திந்திந்தீந்—
திங்கத்தோங் கிடதகதரிகுடு—
திந் திந் திந் தீந்த தக்க—
தேபம் தோங்கத்தோந் திக்கி தக்க—
தொந் தக தக திகி திந்திந்தீம்—
தகதிகிதிந் திந்தீம் ॥
தோதிகிதாம் தந்தந்தாம்—
தாங்கத்தோந் திக்கிதக்க ॥
தோதிகிதீந் —திந்திந்தீம்—
தீங்கத்தோம் கிடதகதரிகுடு ॥
தொதிகிதாம் —தந்தந்தாம்—
தொதிகிதீந் —தீந்திந்தீம்—
தொதிகிதாம்—தொதிகிதீம்—
தத்தோங்கிடதோம்—கிடதகதரிகுடு—
தகதளாங்கு —தகதளாங்கு —ததிங்கிணதோம்.

## தீர்மானம்

தந்தக—தகதக— தந்தக—தகதக—
தந்தக—தகதக—தளாங்குதோம் ॥
திந்திகி திகிதிகி—திந்திகி திகிதிகி—
திந்திகி திகிதிகி—தீங்கணதோம் ॥
தந்தக தகதக—தளாங்கும்—
திந்திகி திகிதிகி—தீங்கணதோம் ॥
தளாங்கும்தோம்—தீங்கணதோம் ॥
தொந்தகதத்தி—தகதரிகிடதக—
தகதளாங்கு தகதளாங்கு— ததிங்கிணதோம்.

பெண்கள் இந்தவிதமாக மோகரம் என்னும் சொல்கட்டுக்கேற்ப நடித்தபிறகு சாஹமகாராஜா இயற்றிய கணபதி கௌத்துவம் நடிக்கும் விதத்தைக் கீழே காண்போமாக.

## கணபதி கௌத்துவம்

தீத்தீத்தை—தீத்தீத்தை—தித்தை—தத்தா
தித்திதோநம் தா—திக்கிட்ட திக்கிட்ட தக்க—
திருகுடு தாம் தோங்க—தீந்தத்ததீந்தத்ததீந்த
தீந்தத்தக்க—ததிமி திமித தக்க—திருகுடுதாம்
தோங்க—தாதா தித்தா திக்கிட்ட தகதிக்கித்தாம் ॥
தத்த—திக்கிட கிடதக—திக்கிட கிடதக தோங்குடு
கிடதக—நங்கிடகிடதக ॥

கரிமுகஹர ஸுர—வரகமலஜ நுத
வரபாசாங்குச யுக்த—சரணம் தே சரணம்.

தக்கிடதிமிகிடதோம்—தகதோம்—
ததிக்கிடதக திமிகிட்ட தோம்—ஸததம்—
ஸித்தியுக்த புத்தியுக்த—ஸிந்தூர வதனா—
தக்கிடகிட தக்கதோங்க—தேஹிவரகணபதி—
திக்கிட கிடதக—திக்கி தோங்க
பாஹி நிரந்தர—ஸாஹேந்த்ர தேவ
திருகுடுதா—திருகுடுதை—தத்தா ॥
தித்தி தத்தித்தை—தோம்தோங்கிட தகதோம்—
தத்திகிடதக திக்கித்தா— ॥

## தீர்மானம்

தந்தக தக தக—தந்தக தக தக தக
தந்தக தக தக—தளாங்கு தோம்
திந்திகி திகி திகி—திந்திகி திகி திகி
திந்திகி திகி திகி—தீங்கணதோம் ॥

தந்தக தக தக தளாங்குதோம்

திந்திகிதிகி தீங்கணதோம்—தளாங்குதோம்

தீங்கிணதோம்—தோந்தக தத்திதக தரிகிட தக—

தகதளாங்கு—தகதளாங்கு—ததிங்கிணதோம்

இதன்பிறகு சாஹஜி இயற்றிய விருதுகள் பெற்ற நாடகசாலை பெண்கள் நிலைக் கட்டணம் எனப்படும் சொல்கட்டுகளுக்கேற்ப நாட்டியம் செய்யும் முறை:—

தெயிதெயிந் தத்த—தாஹத்த தெயிதெயிந்—
தத்த தத்த ॥

தெயிதெயிந் தத்த—தாஹத்த தெயிதெயிந்—
தத்த தத்த ॥

தத்திந் தத்தா—திந்தத்தா—திந்த்ததா—
தததகி—தததகி ॥

தக திந் தத்தா —திந்தத்தா —திந்தத்தா—
தத ததி—தத ததி ॥

தந்தக தக தக—தாந்தக தக தக—
தந்தக தக தக தளாங்கும் ॥

திந்திகி திகி திகி —தீந்திகி திகி —
திந்திகி திகி திகி தீங்கணதோம் ॥

தந்தகதக தளாங்குதோம்.
திந்திகி திகி திகி தீங்கணதோம்.
தந் தந்தாம்—திந்திந்தீம்
தொந்தக தத்தி—தக தரிகிடதக
தக தளாங்குதக தளாங்கு—ததிங்கணதோம் ॥

இதன்பிறகு சாஹஜி இயற்றிய சொல்கட்டுகளுக்கேற்ப பெண்கள் கீழ்காணும் முறையில் நாட்டியம் செய்வர் :

## சொல்கட்டு

தாந்தி தத்திமிதக ஜெகணகஜெக—
தத்தோங்குடு தகதோங்குடு திமிகிடு
தந்தி தாந்தி தகதணந்தி கிணிஜெக
தத்தோங்க தகதோங்க—தோம் தோங்கா—
தகதகஜெகணக ஜே ॥

தத்ந்திதத்திமிதக ஜெகணகஜெக
தத்தோங்குடு தகதோங்குடு திமிகிடு—
தந்தி தாந்திதக—தணம்தகிண ஜெக—
தத்தோங்க தகதோங்க—தோம்தொங்கா—
தகதகஜெகணக ஜெக ॥ 2 ॥

தாந்தி தத்திமிதக ஜெகணக ஜெக—
தத்தோங்குடு —தகதோங்குடு—
திமிகிடு —திமிகிடு —தாந் திதாந்திதக—
தணம் தகிணஜெக— ॥ 3 ॥

தந்தந்திதத்திமி—தக் ஜெக ணக ஜக—
தத்தோங்குடு தகதோங்குடு திமிகிடு—
தாந்தி தாந்தி தக—தணம் தகிணஜெக
தாந்தி தத்திமிதக ஜெகணகஜெக ॥ 4 ॥

தந்தந்திதத்திமிதக ஜெகணகஜெக—
தாந் திதத்திமி—தந்தந்திதத்திமி—
தக தோங் காக்க—திகிதோங் காக்க—
திகிதக —தக்கிட கிடதரி—திமிகிட கிடதரி—
தோம் தோங்கிடதக தோங் காக்கதோம்—
திமிகிட. கிதரி—தீந் தீந் கிடதக—தீங்கிணதோம் ॥ 5 ॥

தக்கிட கிடதக தலாங்குதோம்—
திக்கிட கிடதரி தீங்கிணதோம்—

தளாங்கும்—தீங்கிணதோம்—
தஹத்த தேஹிததக—தக்கத்தோ திந்ததிந்ததீ—
தை தக்கிட கிடதக —திக்கிட கிடதக ॥ 5 ॥

திக்கத்தோம் —திந்த தித்த திந்த திந்ததீ—
தை தக்கிட கிடதக —திக்கிட. கிடதக—
தக்த்தோம் திந்ததிந்த—
ததிக்கத்தோ திந்த திந்த
தக்கத்தோம் திக்கத்தோம் திகிதக
தஹதடிங்கு தகடிங்குதக்குதக.
தஹத தீனுதக —திருகுடுதக ததிங்கிணதோம்— ॥ 6 ॥

## ஜதி:

தாந்தித் திதாந்தாம்—தித்திதாந் தாம்—
தித்திதாந் தகஜக-தோம் தோம்தோங்க தோம்தோங்க ॥
திந்தத் ததீம் தீம்—தத்ததீம் தீம்—
தத் ததீந் தக தக—தோம் தோம் தோங்க தோம் தோங்க ॥
தாந் தித்திதாந்தாம்—தித்திதாந்தாம் ॥
தீந்தத் ததீந்தீம்— தத்ததீந்தீம் ॥
தாந்தத்தி தாந்தகதக ॥ தீந்தத்ததீம் தகதக
தொந்தக தத்திதக தரிகிடதக—
தகதளாங்கு தகதளாங்கு ததிங்கிணதோம் ॥
திருகுடு தத்தளாங்கு — தாஹத ஜெம்தரி ஜெம்தரி தகதரி
தக ஜெகணக ஜெக — திமி திமி கிடதக
ஜெனுஜெனு தணதக — தாஹ(தஜெம்) தகதக —
தளாங்குதக — தளாங்குதக தோங்க ததிங்கிணதோம் —
தக்கு திக்கு தத்திமிகிட கிடதத — தஜெனுத ததணத —
ததிமிதகிடதக — தகிடததீனுதக —
திரிகுடு(தக்க ததிங்)கிண தோம்

திரை இசையில் சகசி இயற்றிய தோடி கீதம் ஆதித்தாளத்தில் பாடப் படுகிறதைக் காண்க.

கா கா மா மா தா மா மா கா
போ கா யோ கா போ கா ரா கா
கர் ரீ நி ஸா கா ரீ ஸா ஸா
நா கா வே கா தே கா த்யா கா || விளம்பம் ||

கம - பப - தத - பம - தத - பம - கம - மக
ஸர - ஸீஜ - பவ - நுத - சர - ணவ- வவி- ஹ்ருத
கம - பம - தப - பம - பத - நித - நிகி - ஸஸ —
ஸர- ஸிஜ - ஹித - நுத - சர - திச - ரதி - ப்ருத || மத்யமம் ||

நிரிஸரி - ஸநிஸஸ - நிநீதநி - ததபம - பதநி - பதபம - ததபத - பமபப -
நிருபம - முநிதுத - வரதஸ - ததநத - ஸ ஂரநக - ஸஂசரித - கரிமுக - குஹயுத -
ககமம - பமபத - நிததப - பபமக - கமநித - பதபம - ததபம - ககரிஸ -
க்ருதிகத
ஹரிஹய - நுதிரத - புரஹர - நவஸித - கரதர - சரக்ருத - ஸஂருசிர
|| பரகாலம் ||

**சிங்கார வர்ண ஸ்வரஜதி :**

மா மாம — மாமா — மாமை — மாமை — மாமை — மீமை
மேமே — மீமா — மீமா — மேமே — மோமீ — மோமீ — மோமீ || ப ||

இராகம் : **தோடி.** **ஆதி** தாளம்

ககரீஸ்ஸரிநிரிஸா நநித
தநிஸஸா நிரீஸ்ஸஸாஸ
பமா மாகா — மாக கரிஸ

கமபபாம — தபமகரிஸ —
பா மாம்மா கா மா க காரிஸ —
ததநி தா த — பமபமா ம —
கரிமகரிஸ — பாமாம்மாகா —
மா க கரிஸ,

ஸஸஸாஸநி — தநிநீநித —
பத தாதப — மப பாப்பம —
கம கமபம — தாபமகாரிஸ

ஸரிகா கரி — கம பாப ம
பத நிந்நிதநிஸா
**நாயக நிஜவர தாயக அச்சுத**
**ஸாயக புவன விதாயக தியாகேச**
கமபதபம — பதநிந் நித —
பாத தாநி — தாபம பா —
தந்நிஸா நி — தாப தபம
பதநி தபம — தாப தபம
பதநி தபம — ககரி ஸா

## சொல்கட்டு

தத்தின்னாங் கிடதக—தாந் தித் தக்கிடதக
ஜெம்தரித்தகணங் கித்தாந் தித்தாந்—
தித்தாந் தித்தாந் தீந்தத்தக் கிடதக—
தஜ்ஜெம் தத்தாஹத்த—தாந் தித் தகதாம்—
தத்திமித தாந்தி.
தாஹத் தத்த கணங்கி—ஜெம்ஜெம் தரி தகதோம்—
தககிணாம் கிடதக—தஜ்ஜெம் ஜெம் தகதரி—
தத்தித்தாம் தக தக—திந் திந் தீந் திமிகிட—
தஜ்ஜெகுத்தகணங்கி —த்தாஹத்தக்ணஜேம்—
தகதரிகுடு —தகஜனகிட —ஜேம்ஜேம்தரி —தகதோம்.
நாயக நிஜவர தாயக அச்சுத
ஸாயக புவனவி தாயக தியாகே ச
திமி திமிகிடதகஜேம்தரி—தாஹதீனுதாஹதஜேம்—
தத்தளாங்கு தக தரிகிட -தகதோங்குடு தக ததிங்கிண தோம்.

இவ்விதமாக ஸ்வரஜதியும் சொல்கட்டும் நடித்த பிறகு சல்லாம் தருவுக்கு தகுந்தாற் போல் அபிநயஞ் செய்வதை காண்க

இராகம்: **பைரவி.** அட தாளம்

**சல்லாம் தரு**

கற்பூர தவளாங்க—கந்தர்ப தர்ப பங்க
சர்ப பூஷண த்ருத கங்க—ஸதய தியாகராஜ உத்துங்க.

**ஜதிஸ்வரம் :**

நிஸகாரி கமாப—ததபம—கரி கமபம—
பதநிததப—பதநிஸரிஸநிரிஸன்னீதப—
ஸாநிததபமதாபாமகாரிஸரிஸ ॥

**வசனம் :**

" ஸல்லாமு ஸல்லமுரே " ( வணக்கம் வணக்கம் ஐயனே )

**சொல் :**

தக திமிகிட ஜெம்தரி தக்கிட கிடதக—
தக தளாங்கு தத்திமிதா ஹத
தோ திகிணாந்திமி—ததிமி தகிட தகஜெனு—
திருகுடு தக் தக தோங்கு தக ததிங்கிணதோம்.

**வசனம் :**

" ஸல்லாமு ஸல்லாமுரே " ( வணக்கம் வணக்கம் ஐயனே )

**ஜதிஸ்வரம் :**

காரிகமபதாப—மப்பாமகாரிஸ—
ரிகமாககாரி—ப்பாமகாரிஸ—
ரிகமாககரிர—ஸாஸ்ஸ
நிநிதபமா—ததபமப ॥ 2 ॥

ஸாஸ்ஸநிந்நிஊா—நிநிதாபமா—ததபாமப—
ஸா ஸஸா ஸஸ—நிஸநீநித—
பா தநீநீதநீததாப—
மாபதபதநிதபா தா பமப்பாம || 2 ||

பா தநீந்நிதநீஸ்ஸஸாஸ்ஸஸ —
நிரீர்ரிஸரிநிஸநீநீத —
பதநிதநிஸரீஸநிஸ்ஸா நிநீதப —
மாபாதபதநித பாதாபமப்பாம || 3 ||

**சொல் :**

தத்திண்ணம் கிடதக — தஜெம் ஜெம் கிடதக
தந்திந்த தத் திம்மித தஜெனுத தாத —
ஜெனுத தஹத — தந்திந்த தஜெனுத —
தத்திமிகிட தஜெனுதக — தத்திதாங் கிடதக —
தகதோங்குதக ததிங்கிணதோம் ||

**ஜதிஸ்வரம் :**

காரிகம தாப மப்பாம காரிஸ —
ரிகமாக காரி — ப்பாமகாரிஸ —
ரிகமாக காரி — ஸாஸ்ஸ ||

இதன் பிறகு சாஹராஜா இயற்றிய பத சாகித்யம் அபிநயம் செய்யப் படுகிறது. நாட்டியம் முடிவுபெறும் தருவாயில் ஜக்கிணிதரு பாடப்படுகிறது. அதற்கேற்ப நாட்டிய பெண்டிர் அங்கவையவங்களை விறுவிறுப்பாக அபிநயங்கள் செய்து காட்டி முடிக்கின்றனர். நாடகத்தின் முடிவில் மங்களாசரணங்கள் பாடப்படுகின்றன. ஜக்கிணி தருவை காண்க :-

### ஜதி—ஆதிதாளம்

### முதல் ஜக்கினி தரு

தத்திமி தத்தித் தகதரி கிடதக
தகிட தீனுதக தகிட தீனுதக

தணம் தகிணஜெம் தஜெம் தகஜெம் தக
ஜெனுஜெனுத தணதணத ததளாங்குதோம்—
தகஜம் ணகஜம் கிடதக தகஜெனுத
தணதணத தளாங்குதோம்—
தீங்கிணாங்கு ணதஜகு தகணங்கி
தாங்கி தத்திம்மித ஜகுணகஜெம்—
தாம் தாத்தி திதாம் தித்தத்திந் தாந்தி
தஜெகு தகணங்கி த கணங்கி தாஹத்தஜெம்—
தாரிகுந்தாரி தாஹத்த கிண ஜெம்
தாம் தாத்தி தாந் திததி தாந்தி
தத் திமி தத்தி தக தரிகிடதக
தகிடத தீனுதக தளாங்குதோம்—
தத்திமி தத்தி திமித தரிகிடதக
தீங்கு ணாங்குணாங்கு தகதளாங்குதோம்—
தத்திமி தத்தி தளாங்குதோம்—
தீந் திமி தத்தி தீங்கணதோம்—
தகதோம்—திகதோம்—திகிதக—
தக தளாங்கு தக தளாங்கு ததிங்கிணதோம்.

இராகம் : **பிலகரி** **ஆதி** தாளம்

முதல் ஜக்கிணி தரு

இந்து களாதர ஸுந்தரவதனபு—
ரந்தர வந்திதசரணுரே.
குந்தர தனயர விந்தநயன—கர
நந்தித சாஹேந்தரானந்தரூப—தியாகேச.

**வசனம் :**

எலிலாம் எல்லாம்லே தேவாதிதேவ
எலிலாம் எல்லாம்லே.
எலிலாம் பரமேச எலிலாம் பூதேச
எலிலாம் தியாகேச தாம் தகதத எல்லிலாம்.

**மூன்று கால ஸ்வரம் :**

ஸாரிக காரிஸ—ரீகபபாம்மக—
கபதஸ ஸாநி நீத—ரீஸரீஸதாபமக —
பதஸாநித பதநி—பததபமகரிக
ஸரிகபாமாம்கா—பதநிததாபமா கரிரிஸ.

எலிலாம் எல்லாம்லே—

தாஹங்க தகஜனுதாம் — கிடதரிதகஜனுதாம்—
கிடதரிதகஜனுதாம்
தணம்தகிடதரிதகஜனுதாம்.

எலிலாம் எலிலாம்லே எலிலாமி லாலேலலாலே.

தக்ததிந்ததக—தணம்தகிடதரி—
தின்னானுதக தணேகுதகதித்தா.

எலிலாம் எல்லாம்லே.

சொல்—ஜதி

திந் தீந்திமித தகதாம் —தக தக திந் திந் தீந்—
தக தக திந் திந் தீந்—திருகுடுதீந்—திகி தக
திரிகுடுதீந் திகிதக—
தகதளாங்கு தக தளாங்குதோம் ॥

திந் திந் தீந் திமி தரிகிட தக
தத்தோம் தகதோம் திருகுடுதக
தக தளாங்கு தக தளாங்கு தோம்— ॥

தஜ்ஜெகு தகணங்கி தாஹத
தஜஜெம்தரித(க)— கிடதளாங்கு தகதிமி—
தஜ்ஜெனுதாம் தகஜனுதாம்.
தத்தோம் தகதோம் தகதிமி
தகதளாங்கு தக தணேகுதகதித்தா ॥

நாயக புவன தாயக கேசவ
ஸாயக தியாக மூக்தி தாயக சங்கர.

தந்திமி தத்தி தக தரிகிட தக—
தீங்குணுங்குதக—தளாங்கு தகதிமி
தக்கிணாம் தககிணும்—கிடதரி
தத தளாங்குதக தணேகுதகதித்தா ॥
எலிலாம் எல்லாம்லே.

## ஜதி—அடதாளம்

## இரண்டாம் ஜக்கிணி தரு

தாந்தி தத்திமி தஹததெயிதெயி
திதாங்கத்தோம் தாம் தாதிதாம் தாந்தி
தத்திந்ததிந்ததிந் தத்ததாந்தகதக
ததெயிதெயி தளாங்கு தக தித்த
தெயி தத்தாத்த
தத்தந்திதத்திமி தஹததெயிதெயி
தித்தாங்கத்தோம் தாம் தாதி தாம் தாதி
ததிந்ததிந்ததிந்தத்ததாம் தகதக
தத்தெயிதெயி தத்தெயிதெயிதெயிதெயி
தளாங்குதக தித்த தெயிதத்தத்
தாந்திதத் திமி தஹதஹதெயிதெயி
தித்தாங்கத்தோம் தாம் தாதிதாம் தாந்தி
தந்தீந்த திந்த திந்தத்த தாந்தக தக
தந் தந் திதத் திமிதஹத தெயிதெயி
திதாங்கத்தோம் தாம் தாந்திதாம் தாந்தி
தந்தந்தி தத்திமி தஹத தெயிதெயி
திதாங்கத்தோம் தாம் தாந்திதாம் தாந்தி
தாந்திதத்திமி தஹததெயிதெயி
தந்தந்திதத்திமி தஹத தெயிதெயி
தாந்தி தத்திமி தந்தந்தி தத்திமி
தத்தளாங்கு தளாங்குத தாஹத தக தித்த,

சொல் :

தஜம் தரி தக தரி திமி கிட
திமிகிடதக தாஹத தளாங்கு
தளாங்கு தகதஜனுத
தஜனுததகஜனு ததண
தஜனுத தாஹததோம் —தாஹததோம்—
தளாங்குதோம் தளாங்குதக தத்திகிட தக
தாந்தித்தோம் தகிடதோம்
த தளாங்குதக தரிகிடதக
தாம் தா தி தாம் தா தி
தகதளாங்கு திமிகிட கிடதக
த த தாந் தி தாம் தாந்தி
தத்தளாங்கு தக தரிகிடதக
த தளாங்கு தளாங்கு தகதி
தஹத தேஹி ததோங்கிடதக
ததிங்கிணதோம்.

ஜதி :

தீந்த தத்திமி தாஹ த தெயி தெயி
திதாங்கத்தோம்.
தஹத திந்திமி தீ தெயிதத்தாத்தா.
ததிந்த தத்திமி தாஹத்த தெயிதெயி
தி தாங்க த்தோம்.
தஹத திந்திமிதி தெயி தத்தாத்த
தீந்த தத்திமி தஹத்கதெயிதெயி
திதாங்கத்தோம்.
ததிந்த தத்திமி தஹத தெயிதெயி
தி தாங்கத்தோம்.
தாந்தி தத்திமி தந்தந்திமி தத்திமி
த த்தளாங்குத தகதரித
த தாளாங்கு தக தித்தெயிதத்தாத்த.

சொல் :

தஜ்ஜெகு தகணம் கிடதரி திமிகிட
தக தளாங்குதோம் தக்க த்தோங்க த தோங்க
திகிதக தீங்கிண தக தளாங்கு தத்திமி
தத் தோங்குடு தகதரி திமிகிட
தோம் தோங்க தோம் தோங்க
தக தோங்குடு தக தரி திமிகிட
தோம் தோங்க தோம் தோங்க
தாந் தி தோம் தோம் தோங்க தந்தந்திதோம் தோங்க
தகிடத திகிடத தஹத திகிதக
தளாங்கு தததோங்க தக தரிங்கிணதோம்.

ஜதி :

தந்திமித்திமி தகிடதகஜனு
திங்கிணம் திகிகிணம்திகிதக
தாதாந்திதாதாந்தித்தாந்திதாதாதீந்
தாதாந்திதளாங்குததளாங்குதகதகதித்த.

இராகம் : **பேகடை.** **ஆதி** தாளம்

## இரண்டாம் ஜக்கிணி தரு

பஞ்சான சர்வ ப்ரபஞ்ச காரண—சர்வ
பஞ்சாக்ஷரஸ்வரூப பஞ்ச பாண ஹரண
பஞ்சநதீச துரிதேப பஞ்சாநன—சங்கர
பஞ்சாத்வர ஹிதசா ஹபூபாஞ்சால பால.

**வசனம்** :

எல்லிலாம்—எலிலாம்—லாலே—
எலிலாம்—எல்லாம்—லாலே—

**சொல்** :

தந்திமி திமி தாஹ தகிட தக ஜனு
தக தளாங்கு தகஜனுதாம்—

தஜ்ஜெனுஜ்ஜெனு தாங் கிட தரி—
தாஹத்தக ஜனுதாம்—
தக தணம்த கிணம்த கிட தரி—
தின்னுனுதாஹத கிட தகஜனு—
தந் திமி நிமி தாஹத கிட தகஜனு—
தகதளாங்குதணேகுதகதித்தா.
எல்லிலாம் எலிலாம் லாலே.

திமிதிமிகிட தகஜனுத தகிட
கிட தரிகிட ததிமிதத கஜனு
ஜனுத தணத கதககிண தகதிமி
தக திகி தகதோங்குதக ததிங்கிணதோம்
எல்லிலாம் எலிலாம் லாலே.

( இங்கு "பஞ்சானனசர்வ" என்னும் சாகித்யம் பாடவேண்டும் ).

**சொல் :**

எல்லிலாம் தாஹ தஜ்ஜெகு தகணங்கி
தஜம் தரிதக தகதக எல்லிலாம்.
தஜம் தரி தகதோம் தகஜம்தரி தகதோம்
த தீன்னுங்கிடதக தக தீன்னுங்கிட தக—
திந்தீந்திருகுடு தீந் தீங்கிணத்தோம்
தஜகணாங் கிடதரி தாந் திதக்கிட தக
ஜம்தரி தகணம்தக எல்லிலாம். (எலிலாம் லாலே)

**சங்கரலே ாகவசங்கர பாலித**
**கிங்கர ஸ்வஜன ப்ரியங்கர தியாகேச.**

ஸாநிநிஸஸ்-ஸஸம்மாக காரிஸஸா-ஸஸ்ஸாரிஸ
ஸமமாம்ம கமபபாம்மக-காம்ம காரிஸ-ஸாஸ்ஸஸாரிஸ—
(ஸநிநிஸஸ்ஸஸ) ॥ 1 ॥

கமபாந்நித-தாபமகக-மா கரிஸாரிரி-ஸாஸ்ஸ ஸாரிஸ ॥ 2 ॥

மாபநி-தாபத-பாமப-மாம்மக —காம்ம காரிஸ-கமபாநி—
ஸாநிப-நீததாபமக- காம்ம காரிஸ-ஸாஸ்ஸஸாரிஸ ॥ 3 ॥

பாநிநி தபம-கமபாம்மக—கமபநிஸஸரிஸ—
ஸாஸ்ஸஸா நீப-ஸந்நி தாபாம-பாப்பபாமாக—
காம்மகாரிஸ-கமாபநீ-ததபாம-ககமாக காரிஸ— ॥ 4 ॥

சொல் :
தத்தரிகுடு தகதரிகுடு—தத்திமிகிட-தஜனுதக—
தாந்தி தாந்தி தாந்திதகதோம் - தத்தோங்குடு தகதிமிகிட
ஜம்ஜம்தரி தாஹத்த —தத்தளாங்கு தக தளாங்கு தக—
தணேகு தக தித்தா —எல்லிலாம் எலிலாம் லாலே.

## ஜதி—ஆதிதாளம்

### மூன்றும் ஜக்கிணி தரு

தந்திந்த த்தாஹத் ததக. ஜனுதாம் தத்திதாஹததோம் -
தத்தணஜனுததகஜனு—தாம்தாம்தந்திதாம் தாம்த—
தகதிந்ததாஹத்தத்தகஜனு—தாந்தித்திதா ஹதோம்,
தத்தணஜனுததகஜனுத—தாம்தாம் தந்திதாம் தாம்த—
தந்திந்தத்தாஹத்தத்தகஜனு—தாந்தத்திதா ஹதோம்.

மேற்குறித்த செய்திகளை கூர்ந்து கவனிப்போர்க்கு ஒன்று புலப்படும். சாஹஜி மன்னன் காலத்தில் நன்கு வளர்ந்து வேரூன்றிய பரதநாட்டிய வழி முறை (சம்பிரதாயம்) தமிழகத்தில் இருந்திருக்கிறது. மராட்டியர் காலத்திற்கு முன்பாகவே தஞ்சையில் தனக்கென தனிப்பாணி கொண்ட பரதநாட்டிய வழி முறை வளர்ந்தோங்கி இருந்தால்தான் நமக்கு இப்படிப்பட்ட வளமா இலக்கியங்கள் கிடைக்க வாய்ப்புண்டு. இக்கருத்தை மனதில் நிறுத்தி எண்ணிப் பார்க்கின்ற போது சோழர்காலத்திலும் அதற்கு முன்பும் இக்கலை இங்கு நன்கு வளர்ந்த நிலையிலேயே இருந்திருக்கின்றது. சோழர்காலத்துக் கல்வெட்டுகள் சில நமக்கு இதற்குச் சான்றாக உள. இதற்கான செய்திகளைத் திரட்டி ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்துவோமாயின் தமிழ்நாட்டில் பரதக்கலை வளர்ந்த வரலாறும் பரதக்கலைக்குத் தமிழகம் தந்த கொடையும் யாதெனத் தெள்ளிதின் உணரலாம்.

சாஹஜி மன்னனுக்குப்பின், துளஜா ராஜாவும் நாட்டிய வேதாகமம், நாட்டிய சாஸ்திர மொழி பெயர்ப்புநூல் மற்றும் பல இசை நாட்டிய

நாடகங்கள், கிரிராஜகவியின் சிருங்காரப்பதங்கள் என பல அரிய நூல்கள் தோன்றக்காரணமாய் இருந்து இக்கலைக்கு மேலும் உரமிட்டார்.

(பிரதாபசிம்மன் காலத்தில், 'முத்துப்பழனி' என்னும் நாட்டியமகளிர்க்கு விருதுகள், பரிசுகள் வழங்கி அரசு நர்த்தகியாக இருந்திடச் செய்த செய்திகள் நாம் அறிவோம்.) அவர்க்குப்பின் அமரசிம்மன், இரண்டாம் சரபோஜி ஆகியோரும் இக்கலையில் நாட்டமுடையோராய் புரவலர்களாகத் திகழ்ந்தனர். 'சரபோஜி ராஜ குறவஞ்சி' போன்ற பல வளமான இசை நாட்டிய நாடக இலக்கியங்கள் இக்காலத்தில்தான் தோன்றின. தஞ்சை நால்வர் என்றழைக்கப்படும் சின்னய்யா, பொன்னய்யா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர் இச் சரபோஜி காலத்தில் வாழ்ந்தவர்களே. இந்நால்வர் வகுத்த சிற்சில பாணிகள் இன்றைய நாட்டிய அமைப்புகளில் நாம் காணமுடிகிறது. இவர்களுக்கு முன்பே பரதநாட்டியக்கலை வேரூன்றி இருந்த செய்தியால் நாட்டியக்கலைக்கு இந்நால்வரே புத்துயிர் கொடுத்தனர் எனக்கூறப்படும் கூற்று பொருத்தமாகாது என்பதை உணரலாம். மராட்டிய மன்னர்களுக்குப்பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், ஆங்கிலேயர் ஆட்சி ஆகியவை இக்கலை தேய்ந்து அழிந்து போகும் நிலைக்கே கொண்டு செல்லப்பட்டது.

பரதநாட்டியக்கலையில் மட்டுமே 'தத்தகாரம்' சொல்லப்பட்டது என்றில்லை. 16-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரையில் நன்கு போற்றிப் பாதுகாக்கப்பட்ட பாகவதமேளா நாடகத்திலும், நட்டுவாங்க மேளா நாடகத்திலும் கூத்துகளிலும் கூட தத்தகாரம் சொல்லுதல், பதாபிநயஞ் செய்தல் முதலிய பரதநாட்டியக் கூறுகள் விரவியிருந்தன. இரணியன் தர்பார், நளன் தர்பார், மீனாட்சிதர்பார் போன்ற காட்சிகளில் பரதநாட்டியக் கச்சேரியை நிகழ்த்துவதை, மேற்கூறிய நாடகங்களில் நாம் காணமுடிகின்றது.

நாயக்கர் காலத்து நூல்களான இரகுநாதப்யுதயம், மன்னாருதாச விலாசம், சித்ரகூட மான்மியம், இரணியன் நாடகம், நளன்சரிதை, மீனாட்சியம்மை கல்யாணம் ஆகியன வேத்தியல் பொதுவியல் போன்ற நாடகக் கூறுகளைக் கொண்டதாக உள்ளன.

நட்டுவாங்க ஆசிரியர் பலரிடம் சொற்கட்டுகள், ஜதிகள் போன்றவை இன்னமும் புதைந்து கிடக்கின்றன. அந்தச் சொற்கட்டுகளில் பல அற்புத பாணிகள் தென்படுகின்றன. அவை அனைத்தும் ஒன்றுசேர்க்க அறிஞர்கள், கலைஞர்கள் தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு அதனை இக்கலைக்கு பயனளிக்கச் செய்தல் வேண்டும். நட்டுவாங்க ஜதிகள், சொற்கட்டுகள் அச்சாகி வெளிவருதல் வேண்டும். பாரம்பர்ய சான்றுகள் ஒன்றுசேர்த்து நம்மிடம் வைத்துக்

கொண்டுதான் அன்னிய மாநிலங்களில் நடைமுறையில் காணப்படும் சொற்கட்டுகளுடன் ஒப்பிட்டு கணக்கிட முடியும். தமிழ்நாட்டின் பாரம்பரியம் அண்டைய மாநிலங்களில் எவ்வாறு செல்வாக்குடன் நடைபோடுகிறதென்பதனையும் புரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு 19-ஆம் நூற்றாண்டில் அரசர்களும், புலவர்களும் இக்கலைக்குச் சேவைகள் புரிந்தபோதிலும், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, (திருக்கோகர்ணம்) தஞ்சை, திருவாரூர், வடுவூர், மெலட்டூர், பந்தநல்லூர் போன்ற ஊர்களில் வாழ்ந்த பெயர்பெற்ற நட்டுவாங்கச் சக்கரவர்த்திகளின் நல்லாசிகளுடன்தான் பரதநாட்டியக்கலை மிக உன்னத நிலையில் வளர்ச்சிப் பெற்றதெனக் கூறவேண்டுமே தவிர, குறிப்பிட்ட ஓரிடத்தில்தான் வளர்ச்சியுற்றதெனக் கூறுவது பொருளற்றச் செய்தியாகும்.

பல்கலைக் கழகங்களும், சபாக்களும் இக்கலையின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் நடத்திவருகின்ற போதிலும், கலை ஆர்வங்கொண்ட அறிஞர்கள், கலைஞர்கள் தஞ்சை பரதநாட்டியப் பாரம்பரிய வளர்ச்சியைப் பற்றி இன்னமும் பல ஆய்வுகள் செய்து கருத்துக்கள் கூறவேண்டும். கலைக்கு அரும்பாடுபட்ட மன்னர்கள் புலவர்களின் எண்ணங்கள் நிறைவேற பரதநாட்டிய அரங்குகள், தனித்தன்மை வாய்ந்த கல்லூரி முதவியன தஞ்சையிலேயே உருவாக்கியும், சான்று நூல்களை அங்கு சேகரித்து வைக்கச்செய்தும், தஞ்சைத் தரணிக்கெனத் தனிச் சிறப்புத்தேடித் தரவேண்டியதும் கலைஞர்களின் கடமையாகும்.

Form IV

(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication: | Thanjavur |
| 2. | Periodicity of its Publication | Three issues a year |
| 3. | Printer's Name: | T. M. S. S. M. Library Press<br>Thanjavur. |
| | Nationality: | Indian |
| | Address: | T. M. S. S. M. Library Press.<br>Thanjavur - 613 009. |
| 4. | Publisher's Name: | T. M. S. S. M. Library,<br>Thanjavur. |
| | Nationality: | Indian |
| | Address : | Thanjavur Maharaja Serfoji's<br>Sarasvati Mahal Library,<br>Thanjavur. |
| 5. | Editor's Name: | A. Panchanathan |
| | Nationality: | Indian |
| | Address: | A. Panchanathan, M. A., B. Lib. Sc.,<br>Administrative Officer i/c,<br>Sarasvati Mahal Library, Thanjavur. |
| 6. | Name and Addresses of Individual who owns the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital | T. M. S. S. M. Library,<br>Thanjavur. |

I, A. PANCHANATHAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**A. PANCHANATHAN,**
*Administrative Officer i/c,*
(Signature of Publisher)

**Date: 19—1—1985**

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

T. R. **இராமசாமி**, I. A. S.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
19—1—85.

# PUBLICATIONS OF SARASVATI MAHAL LIBRARY.

| | | |
|---|---|---|
| 1. | GUIDE BOOK TO SARASVATI MAHAL (with illustrations)<br>by A. Panchanathan, M.A., B.Libsc., A. O. i c (English) | 7—00 |
| 2. | ANANDA RAGHAVAM (Sanskrit)<br>Edited by Prof. V. Gopala Iyengar, M. A., | 5 00 |
| 3. | KRISHNA CARITA OF AGASTYA PANDITA (Sanskrit)<br>Edited by T. Venkatacharya | 27—00 |
| 4. | BHAVANA PURUSHOTTAMAM (Sanskrit)<br>Edited by S. Swaminatha Sastri | 15—00 |
| 5. | DHARMA VIJAYA CHAMPU (Sanskrit)<br>Edited by Siromani K. E. Govindan | 3—75 |
| 6. | NYAYA KAUSTUBHA SABDAKHANDA (Sanskrit)<br>Edited by V. Subramaniya Sastri | 65—00 |
| 7. | PHALAVATI (Sanskrit)<br>Edited by Siromani N. S. Devanathachariar | 36—00 |
| 8. | RISHYA SRINGA SAMHITA (Sanskrit)<br>Edited by Agnihotram Ramanuja Tatacharya | 42—50 |
| 9. | KANTIMATI PARINAYAM (Sanskrit)<br>Edited by Siromani P. M. Padmanabha Sarma | 10—00 |
| 10. | DHADEESI PURANAM-VINAVIDAI PURANAM (Tamil)<br>Edited by Pulavar V. Chockalingam, Tamil Pandit | 2—50 |
| 11. | KUSALAVAN KATHAI (Tamil)<br>Edited by Pulavar S. Thilagam, B.Lit., Tamil Pandit | 5—50 |
| 12. | KALACHAKKARAM (Tamil)<br>Edited by Vidwan Adigalasiriyar | 7—00 |
| 13. | MAYANOOL SASTRAM (Tamil)<br>Edited by Prof. Dr. G. Deivanayagam, M.A., PhD., | 3 00 |
| 14. | VANNATHIRATTU (Tamil)<br>Edited by Panditha Vidwan T. V. Gopala Iyar, M.A., B.O.L. | 3—00 |
| 15. | SENDALANGARAN VIRALIVIDUTHOODU (Tamil)<br>Edited by Pulavar Govindarasanar | 1—25 |
| 16. | KULOTHUNGAN PILLAITHAMIZH (by Ottakkuthar-Tamil)<br>Edited by T. S. Gangatharan, M. A., | 6—25 |
| 17. | RAMAYYAN AMMANAI (Tamil)<br>Edited by C. M. Ramachandra Chettiyar | 4—50 |
| 18. | VIRALIVIDUTHOODU (Tamil)<br>Edited by Pulavar V. Chockalingam, Tamil Pandit. | 3—50 |
| 19. | WATER DIVINING IN ANCIENT DAYS (Marathi with English, Tamil Translations)<br>Edited by Krishnaswami Mahadickrao Saheb, B.A., and R. Jayaraman, B.A., B.L., | 5—00 |
| 20. | THYAGESA PADA (Kshetra Kritis) OF KING SAHA MAHARAJA<br>Edited by N. Viswanathan, Telugu Pandit | 14—00 |